1427

Regd. No. M. 873.

தொகுதி ௰ பகுதி 3

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச் செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

1919௵ ஜூலை௴—சித்தார்த்தி ௵ ஆடி௴

விஷயங்கள்.

தற்கால நிலைமை—	65
பிரஹ்மஞான தரிசனம்-பாலபாடம்—	73
எல்லாம் வல்ல ஈசன்—	
செய்யத்தக்கது எது! தகாதது எது—	85
சிறுவர் பக்கம் ஓர் கதை—	89
புத்தகவிமர்சம்—	91
பிரம்ஹ ஞான சபையும் உதயசூரிய சங்கமும்—	93

5 - MAR 1924

அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்
தபால் சார்ஜ் உள்பட வருஷச் சந்தா இந்தியாவுக்கு ரூ 2
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4
மதுரை விக்டோரியா அச்சியந்திரசாலை
Copy-right Reserved.

ஸ்ரீமத் வால்மீகி இராமயண வசனம்.
பண்டித நடேசசாஸ்திரியாரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது
"அழகும், பெருமையும், எளிமையும் ஒருங்கே வாய்ந்த நடைக்கு இவற்றிற்கு நிகரான வேறு புத்தகங்கள் தமிழ்ப்பாஷையில் மிகச் சிலவேயுள்ளன."
மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.
(1) பாலகாண்டம், 244 P P. (2) அயோத்தியாகாண்டம் 501 P P.
(3) ஆரணிய காண்டம் 254 P P. (4) கிஷ்கிந்தா காண்டம் 226 P P.
(5) சுந்தரகாண்டம் 260 P P. (6) யுத்தகாண்டம் 702 P P.
6-காண்டமும் சேர்த்து வாங்கினால் ரூபா 12—8—0
காந்தன் அண்டு ராஜன், புக்ஸெல்லர்ஸ் அண்டு ஜெனரல் ...ண்ட்ஸ், 2 கிழண்டைமாடவீதி மைலாப்பூர்,
மதராஸ்.

உ

ஸ்ரீ ராமஜெயம்.

புது ஜவுளிக்கடை விளம்பரம்.

புதிய தினுசு! * விலை சரசம்!!
கறார் விலை! சொற்பலாபம்!

M. R. சுந்தராஜய்யர்

பலவூர் நாகரீகமான ஜவுளி வியாபாரம்

அம்மன் சன்னதிதெரு மதுரை.

ஐயா,

நாம் இப்போது புதிதாய் ஏற்படுத்தியிருக்கும் ஜவுளிக்கடையில் இந்தியாவில் பலவூர்களில் தற்கால நாகரீகத்திற்கேற்றபடி பட்டுகளிலும், ஜரிகைகளிலும், நூல்களிலும் உற்பத்தியாகும் சேலைகள், சோமன்கள், சித்தாடைகள், பாவாடைகள், ரவிக்கைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள், குழந்தைகளுக்கு பல்சுளுக்களும், சாயம்வேஷ்டிகள், தலைப்பா, கிடாய வகையறுக்களும், மல், காசா, கச்சை, காரிக்கம், உல்லன் போர்வை தினுசுகளும் ஜமுக்காளங்களும் இன்னும் அநேக வித தினுசுகளும், நயமான ஜவுளிகளால் ஏராளமாய் வரவழைத்து, விலை சலிசாகவும் சொற்பலாபத்திற்கு உள்ளூர், அசலூர் வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் ஜவுளிகள் கொடுத்து பிரபலியமான வியாபாரம் செய்து வருகின்றபடியால் தேவையானவர்கள் எல்லோரும் நமது ஜவுளிக்கடைக்கு வந்து தங்களுடைய விருப்பம்போல் வேண்டிய ஜவுளிதினுசுகளை வாங்கிக்கொள்ளவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

N. B.—அசலூர்களிலிருந்து கடிதமூலமாய் வரும் ஆர்டர்களை உடனுக்குடனே கவனித்து ஜவுளித்தினுசுகளை அதிக பந்தோபஸ்தாய் வி. பி. பார்சல் மூலமாய் அனுப்பப்படும். எங்கள் ஜவுளி விலை விபரஜாப்தா (கியாட்லாக) வேண்டுமானால் தபால கடிதமூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

M. R. சுந்தராஜ அய்யர்
அம்மன் சன்னதிதெரு, மதுரை.

தனலெக்ஷிமி சுதேசி ஜவுளிமளிகை.

தீபாவளி! * தீபாவளி!

நயம் திணுசுகள்.

சுதேச ஜவுளிப்பிரியர்காள்! இப்பவும் எமது சுதேசி ஜவுளி மளிகையில் நிகழும் தீபாவளி பண்டிகைக்காக ஏராளமான நயம் ஜவுளி திணுசுகள் நமது நேயர்களுக்குப் பிடித்தமான ரகங்களில் தயாரித்து விற்பனைக்குத் தயாராயிருக்கிற படியால் நண்பர்கள் யாவரும் எமது ஜவுளிகளை நிரம்பவும் சகாயமான விலைக்கு வாங்கித் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடப் படியாகக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

முக்கிய கவனிப்பு:— வெளியூர் ஆர்டர்கள் உடனே கவனிக்கப்படும். ஆப்பிரிக்காவிற்கு ஏஜண்டுகள் தேவை.

இனாம்! எமது கேட்லாக் இனாம்!

தந்திவிலாசம்
முராஹரி
மதுரை.

மு. ரா. கஸ்தூரி அய்யர்,
அம்மன் சந்நிதிதெரு, மதுரை,
(தென் இந்தியா)

வைத்யரத்ன பண்டிட் டி. கோபாலாசார்லு அவர்களின் சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

நன்றாகப் பரீட்சிக்கப்பட்டது !

சென்ற இருபத்தைந்து வருஷங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்பட்டது !!

பிளேக் மருந்து.

1. எல்லாவித பிளேக் ஜ்வரங்களுக்கும் ஸஞ்சீவினி இதுவே.

2. முன் சாப்பிட்டால் பிளேக் வியாதியை வாராமல் தடுக்கும்.

விலை பெரியசெட் ரூ 2—2—0
,, சிறிய ,, ரூ 1—6—0

ஜீவாமிருதம்.

1. ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும் உலோகங்களாலும் தயார் செய்யப்பட்டது

2. ஆரோக்கியத்தையும் தைரியத்தையும் உண்டாக்கும்.

3. பலத்தையும் உத்ஸாகத்தையும் விர்த்தியாக்கும்.

விலை பெரிய சீசா ரூ 3—4—0
,, சிறிய ,, ரூ 1-12—0

காலரா மருந்து.

1. இந்த ஔஷதத்தினால் காலரா விலகிப்போகும்.

2. சீக்கிரத்தில் வாந்தியையும் பேதியையும் போக்கும்.

விலை பெரிய செட் ரூ 1—2—0
,, சிறிய ,, ரூ 0-12—0

அமிருதாமலக தைலம்.

1. வித்யார்த்திகளுக்கும் போசனை ஜாஸ்தியுள்ளவர்களுக்கும் அதிக உபயோகமானது

2. நேத்திர ரோகிகளுக்கும் சிரோ ரோகிகளுக்கும் ரொம்பவும் ஹிதமானது.

விலை பெரிய புட்டி ரூ 1—0—0
,, சிறிய ,, ரூ 0—8—0

பலவித வியாதிகளுக்கும் இவ்விடத்தில் மருந்துகள் கிடைக்கும். காட்லாக்து இனாமாக அனுப்பப்படும். தபால் சார்ஜும், பாக்கிங் கூலிகளும் பிரத்தியேகம். வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்:—

மானேஜர்,
ஆயுர்வேதாசிரமம்,
55 ஆச்சாரப்பன் தெருவு,
மதராஸ்.

உ

உயர்ந்த தினுசுகள்! குறைந்த விலைகள்!!

தூ. ரெங்கசாமி அய்யர் அண் சன்ஸ்

தங்கமெடல்கள் சன்மானம் பெற்ற

ஜவுளி வியாபாரிகள்.

மதுரை.

ரூ. 1முதல் 1000 ரூ. வரையுள்ள ஜவுளி
தினுசுகள் விற்பனைக்குத் தயார்.

நம்முடைய ஜவுளிக்கடையில் காசி பனாரஸ், அம்மாப்பேட்டை, உள்ளூர், பெங்களூர், ஆரணி, காஞ்சிபுரம், கல்கத்தா, பம்பாய், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி இன்னும் அநேக ஊர்களிலிருந்து தருவிக்கப்பட்ட பட்டும் ஜரிகையும் கலந்த உயர்ந்த சேலைகள் ரூ. 50 முதல் ரூ. 1000 வரையிலும் முகூர்த்தப்பட்டு சோமன் ஜோடிகள் ரூ. 10 முதல் ரூ. 150 வரையிலும் ரவிக்கை தினுசுகள் ரூ. 2 முதல் ரூ. 100 வரையிலும் இன்னும் அநேக புது தினுசுகளும் ஏராளமாய்த் தயார்செய்து வைத்திருக்கிறோம். ஆகையால் வேண்டியவர்கள் நம்முடைய கடையில் வந்து பார்த்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தவிர குறைந்த விலையும் கெட்டிச்சாயமுமுள்ள நாட்டு சேலைகள், துப்பட்டாக்கள், வேஷ்டிஜோடிகள் முதலிய அநேக தினுசுகள் ஏராளமாயிருக்கின்றன.

ஹெட் ஆபீஸ்,
கீழவெளி வீதி.

பிராஞ்சு,
மேலக்கோபுர வாசல்.

மதுரை.

ஜகப் பிரசித்தி பெற்ற ஜின்டான் மாத்திரை.

எண்ணிலாக்குணங்கள் நிரம்பிய இந்த ஜின்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப் பெற்று நாடெங்கும் பரவி பல பல வியாதிகளைக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளுயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகளை அணுக வொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் நிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம் விலையோ சரசம்.

380 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ 1. 90 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 20 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

எஸ் வைத்தியா அண்டு கோ

மதராஸ்.

பிராஞ்சிகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள், டாபிலட்கள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்தி ஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்.

எங்கள் மதுரை ஏஜண்டு:—

V. சின்னகிருஷ்ண நாயுடு,
ஸ்ரீ கிருஷ்ண ராஜா அண்டுகோ, மேலக்கோபுர வீதி, மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 10 } சித்தார்த்தி௵ ஆடி௴ 1919௵ ஜூலை௴ { பகுதி 3

தற்கால நிலைமை.

சென்ற ஜூலைமாதம் 1உ ஆரம்பத்தோடு அமெரிக்கா ஐக்கிய நாட்டில் போதை செய்யும் திராவகத்தை விலைக்கு வாங்க முடியாமல் போய்விட்டது, அப்படி விற்றல் சட்ட விரோதம் என்று ராஜாங்க விதி ஏற்பட்டிருக்கிறது. குடியினால் நேரிடும் கெடுதிகளையும், குடியினால் சரீரம், மானம், மனது எல்லாவற்றிற்கும் உண்டாகும் சிதைவையும் அறியும் ஒவ்வொருவருக்கும் இந்த சமாசாரமானது மிகவும் சந்தோஷகரமா யிருக்கும். முக்கியமாய் மேற்கு தேசங்களில் இரண்டு சிநேகிதர்கள் சந்தித்தால், அவர்கள் பேசும்போது இருவர் கையிலும் போதை செய்யக்கூடிய திராவகம் வைத்துக்கொண்டு தான் பேசுவது நாகரீகம் என்று கருதப்பட்டது. அரசன் பால் உள்ள ராஜ விசுவாசத்தைக் காட்டுவதற்கு அறிகுறியா தென்றால், கூடியிருக்கும் கூட்டத்தில் ஒவ்வொருவரும் மேற்கூறிய திராவகத்தைக் கையில் ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, முகாமையான ஒருவர் ராஜ விசுவாசத்தைக் கூறும் வார்த்

தைகளைச் சொன்னவுடன், எல்லோரும் அந்த திராவகத்தைப் பருகுவது தான். இவ்விதம் மங்களகரமான சமயங்களிலும், துக்க சமயங்களிலும், கூடுமான சமயங்கள் எல்லாவற்றிலும் மேற்கூறிய திராவகத்தையே உட்கொள்வது நியாயம் என்றும் நாகரீகம் என்றும் மேனாட்டில் கருதப்பட்டு வந்தது யாவருக்கும் தெரியும். அத்திராவகத்தைச் சாப்பிடாதவனை இகழ்வதும் வழக்கமாயிருந்து வந்தது. மேனாட்டு மருந்துகளில் திராவக ரூபமாயிருக்கும் மருந்துகள் எல்லாவற்றிலும் மேற்கூறிய திராவகம் கலந்துதானிருக்கும். ஆகையால் இந்தியா முதலிய கீழ்நாட்டு தேசங்களிலும் தேக சௌக்கியத்திற்காக மேல் நாட்டு மருந்து சாப்பிடும்படி நேரிட்டபோது அநேகர் அதன் மூலமாயும் தீத்திராவகத்தைப் பருகும் வழக்கம் பிடிபடவே, வியாதி தீர்ந்த பின்னரும், தீத் திராவகத்தைப் பருகும் வழக்கத்தை விட்டார்களில்லை. நாம் யார் பெரியவர்கள் அல்லது நாகரீகமானவர்கள் என்று எண்ணுகின்றோமோ அவர்கள் செய்யும் காரியங்களை அனுசரிப்பது உலக இயல்பாகையால், இந்தியாவிலும் ஆங்கிலருடன் அதிகமாய்ப் பழகுகிறவர்கள் அந்த நெருப்புத் தண்ணீரைப் பருகும் வழக்கத்தைக் கொண்டார்கள். ஆகையால் உலகம் முற்றிலும் இத்தீய வழக்கமானது பரவியிருக்கிறது. இத்தீயவழக்கத்தை ஒழித்தல் நலம் என்ற கொள்கையைக்கொண்டு முயற்சிப்பவர்கள் முயன்றும் அவ்வளவு பிரயோஜனப்படவில்லை.

***

ஆனால் சென்ற சில வருஷங்களாக மேனாட்டு வைத்திய சாஸ்திரத்தில் தேர்ந்த பெரிய வைத்திய சிகாமணிகளில் ஒரு சிலர் தீத்திராவகத்தால் கெடுதலே யொழிய நன்மையன்று என்று தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். இருந்த போதிலும், குடி குறையக்காணோம். இப்படி இருக்க, 1914ம் வருஷத்தில் யுத்தம் தொடங்கின உடன் ருஷியா தேசத்தில் அத்தேசச் சக்கரவர்த்தியானவர், உத்தரவு பிறப்பித்து அத்தேச முழுமையிலும் போதை சாமான் விற்கக்கூடாது என்று விலக்கினார். அதனால் உபயோக மற்ற வழியில் பணம் செலவாகாமலிருந்ததோடு, யுத்தத்தில் சேனைகளும் நன்றாகச் சண்டையிட்டன வென்றும் சாதாரண ஜனங்களுக்குள் சண்டை சச்சரவுகளும் குறைந்தன வென்றும் வெளியாயிற்று.

மேற்கூறியபடி அமெரிக்காவில் ஐக்கிய நாட்டில் உள்ள 48 உபநாடுகளில் 45 உபநாடுகள் க்ரமமாக போனதை திராவகத்தை விலக்கவேண்டும் என்று தீர்மானம் செய்து விட்டன வென்றும், அப்பால் அமெரிக்கா ஐக்கிய நாட்டில் முற்றிலும் மதுவிலக்கப்பட்டதென்றும் அறிகிறோம். இதனால் உலகத்திற்கே மிகுந்த க்ஷேமம் உண்டு. நாகரீகத்தில் சிறந்ததென மதிகப்படும் அமெரிக்காவில் மதுவானது விலக்கப்பட்டதென்றால் மற்ற தேசங்களிலும் அது சீக்கிரம் நீக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. மேலும் கானடா என்ற அமெரிக்காவின் வடக்கு பாகத்திலுள்ள பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டிலும் 'கியூபெக்' மாகாணத்தில் தவிர மதுவானது விலக்கப்பட்டதாம்,

***

மேற்கூறிய தேசங்களில் சட்டத்தால் மது விலக்கப்பட்டது. ஆனால் ஆஸ்திரேலியாவில் ஜனங்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டுத்தான் மதுவிற்பனைக்காக கடை வைக்கலாம் என்று விதி. ஆனால் பெரும்பாலும் ஜனங்கள் கூடி மதுவிற்பனைக் கடைகளை வேண்டியதில்லை யென்று சொல்வதால் பெரும்பாலும் மதுவிற்பனை குறைந்திருக்கின்றது என்று தெரியவருகிறது. ஆனால் இங்கிலாந்தில் மட்டும் 250,000,000 பவுன் விலை பெருமான மதுவானது செலவாகிறது என்று தெரியவருகிறது. இது விசனிகத்தக்கது. அத்தேசத்தில் மதுவிலக்கப்பட்டால அது அந்த தேசத்திற்கும் க்ஷேமகரமாயிருப்பதோடு, அந்நாட்டிற்கு உட்பட்ட இந்தியாவுக்கும க்ஷேமமாகும். ஏன என்றால், இங்கே மதுவிலக்குச் சட்டத்தை சட்டசபைகளில் நிரூபணம செய்ய விசேஷமாக ஆக்ஷேபணையிருக்காது. ஆகையால் சீக்கிர காலத்தில் இந்த சீர்திருத்தமானது நிகழவேண்டுமென்று விரும்புகிறோம்.

***

பிரஹ்மஞான சபை அங்கத்தினர் அநேகர் சென்ற யுத்தத்தில் சைன்னியத்திற் சேர்ந்து போர்புரிந்தனர் என்பது நேயர்கள் அறிந்த விஷயம். அநேகர் தங்களுடைய அறிவின் மேன்மையால் அசகாயமான சூரச்செயல்களால் தங்களையும், சபையையும் மேன்மைப்படுத்திக்

கொண்டார்கள். சாக்காடு என்றால் என்ன என்ற கேள்வியை ஏற்றபடி அறிவதற்கு நமது சபை அங்கத்தினர் ஏற்கனவே படித்திருந்த புத்தகங்களும், கேட்டிருந்த உபந்யாசங்களும் உதவியா யிருந்தன. தங்களுடைய அறிவைப்பரவச் செய்வதில் சேனையில் சேர்ந்த பிறகு கூட சிலர் சும்மா இருக்கவில்லை. குருக்ஷேத்திரம் என்ற நாமத்துடன் பிரெஞ்சு பாஷையில் ஒரு பத்திரிகையை சேனைகளில உள்ளவர் சேனைகளுக்குப் பிரசுரித்து வந்தார்கள். ஆங்கிலத்திலும் லெப்டினண்டு வைட் என்ற ஒரு ஆங்கில உத்யோகஸ்தர், பிரஹ்மஞான சபையைச் சேர்ந்தவர், சேனையில் சேர்ந்தவர்க்கென்று ஒரு உபன்யாசம் செய்து அதை அச்சிட்டு, 10,000 பிரதிகளை அந்த சேனைகளுக்கே செலவழித்தார் என்று தெரியவருகிறது. இதனால் அநேகருக்கு மிகுந்த உபயோகம் ஏற்பட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

***

"ஈ, கொசுகு, முதலிய சிறிய ஜீவஜந்துக்கள் நம்மை அடிக்கடி தொந்தரவு செய்கின்றன. அவைகளால் பெரும் தீங்குகள் நேரிடாவிடினும் சில்லரையாக அடிக்கடி உபத்திரவம் நேரிடுகின்றது. நம்முடைய இரத்தம் அந்த ஈ, கொசுகு முதலிய ஜந்துக்களுக்குப் பிரியம். அது அவைகளுக்கு ஆகாரம். ஆகையால் அவை ஆகாரத்தை உட்கொள்ளுவதற்காக நம்மைக்கடிக்கின்றன. அம்மாதிரியே நம்முடைய பிராணமய கோசம், மனோமய கோசத்தின் ஒரு பாகமான காமசரீரம், இரண்டையும் அடிக்கடி தொந்தரவு செய்யும் சிறிய ஜந்துக்களிருக்கின்றன. அந்த லோகத்திரவியத்தால் ஆகிய ஜந்துக்கள் அவை. அவைகள் தம்முடைய ஆகாரத்திற்காகவும் ஆனந்தத்திற்காகவும் நம்முடைய மேற்கூறிய சரீரங்களை உபத்திரவம செய்கின்றன. அவைகளை விலக்குவது எப்படி? ஈ, கொசுகு, வண்டு, எறும்பு இவைகளை எப்படி விலக்குகிறோம்? கொஞ்சம் கூட அசுத்தமின்றி, நம்மைச்சுற்றிலும் சுத்தமாயிருந்தால் அவை அணுகா. அம்மாதிரி அவ்விரு கோசங்களையும் சுத்தமாய் வைத்துக்கொண்டிருந்தால் மேற்கூறிய தொந்தரவுகளை விலக்கமுடியும். காமசரீரத்தை சுத்தமாய் வைத்துக்கொள்வது என்றால் எப்படி? அசுத்தமான எண்ணங்கள், உணர்ச்சிகள் தான் மேற்கூறிய சரீரங்களை அசுசி

பாக்குகின்றன. ஆகையால் நாம் கவனமாக நல்ல எண்ணங்களையும் உணர்ச்சிகளையுமே கொண்டிருந்தால் மேற்கூறிய ஜந்துக்களால் பீடிக்கப்படமாட்டோம் என்பது திண்ணம்" என்றிவ்விதமாக ஒரு பெரியவர், ஆஸ்திரேலியாவில் பிரசுரமாகும் தியாஸபி என்ற பத்திரிகையில் கூறுகிறார்.

***

தேசியக்கல்வி அபிவிருத்தி சபையின் ஆளுகையின் கீழ் இருக்கும் பள்ளிக்கூடங்களில் சென்ற வருஷத்தின் முடிவில் பரீக்ஷைகள் நடந்தனவென்றும், அப்பரீக்ஷைகளில் பரீக்ஷிக்கப்பட்ட மாணாக்கர்களில் 100க்கு 82 பேர் தேறினார்கள் என்றும் தெரியவருகிறது. சென்னை சர்வகலா சாலையில் பரீக்ஷைக்குப்போகும் மாணாக்கர்களில் 100க்கு 20 பேர் தேறுவது கூட சிரமமாயிருக்கையில் மேற்கூறிய தேசியக்கல்விப் பாடசாலைகளில் அநேகர் தேறுவது பலருக்கு ஆச்சரியமாகத் தோன்றலாம். சிலர் ஒருவேளை மேற்கூறிய பரீக்ஷைகள் மிகவும் சுளிவாக இருக்கலாம் என்றும், வேண்டுமென்று எல்லோரையும் தேறும்படி செய்கிறார்கள் என்றும் நினைக்கலாம். ஆனால் தேசியக்கல்வி அபிவிருத்தி சபைக்காரிய தரிசி எழுதுவதைப் பார்த்தால் மேற்கூறிய இரண்டு குற்றங்களையும் கூற கொஞ்சமும் இடமில்லை. யென்று தோன்றுகிறது. சில காலத்திற்கு முன் திருவாதியில் இருக்கும் ஸம்ஸ்கிருதப் பள்ளிக்கூடத்தின் அறிக்கைப் பத்திரத்தைப் பார்வையிட்ட போது அப்பள்ளியில் பரீக்ஷைக்குப் போன மாணாக்கர்களில் பெரும்பாலர் தேறினார்கள் என்று வெளியாயிற்று. மேலும் கல்கத்தா சர்வகலாசாலையில் சில காலத்திற்கு முன்வரை பரீக்ஷைக்குப்போன மாணாக்கர்களில் பெரும்பாலர் தேறினதாகத்தெரிய வருகிறது. சென்னையில் தான பரீக்ஷைகளில் பெரும்பாலர் தேறுகிறதில்லை யென்பது வழக்கம். அமெரிக்கா முதலிய தேசங்களிலும் பரீக்ஷைக்குப்போகிறவர்களில் பெரும்பாலர் தேறுவதுதான் வழக்கமாயிருக்கிறது. நமது சென்னை சர்வகலாசாலையில் தேறுகிற மாணாக்கர்கள் தான் தேறாதவர்களைக் காட்டிலும் நிச்சயமாய் சிலாக்கியமானவர்கள் தானா என்று பார்த்தாலும் அதுவும் அப்படிக்காணோம்.

வகுப்புக்கு ஏற்றமாணுக்கர்களைத் தேர்ந்தெடுத்து வகுப்புக்கு ஏற்றபாடங்களை திட்டம் செய்து, அப்பாடங்களைக்கற்பிக்க ஏற்ற உபாத்தியாயர்களைத் நியமித்தும் அவர்களைக்கொண்டு கல்விகற்பிக்கும்படி செய்தால், வருஷக்கடைசியில் பரீக்ஷைகளில தேறுவதைத்தான் நாம் நியாயமாய் எதிர்பார்க்கவேண்டுமேயொழிய தேறக்கூடாதுஎன்று எதிர்பார்ப்பதற்கு நியாயமேயில்லை. பரீக்ஷை செய்யவேண்டியவர் யார் என்று ஆலோசிப்போம். சற்றுக்கொடுத்த உபாத்தியாயர் தான் எந்த விஷயங்கள் கற்றுக்கொடுக்கப்பெற்றனவோ அவைகளில் மாணுக்கன் சரியான தேர்ச்சி பெற்றிருக்கிறுனு என்று ஆராயவல்லவர். அப்படியே அமெரிக்காவில் உள்ள பெரிய சர்வகலாசாலைகளில் வழக்கமாயிருக்கிறதாய்த்தெரியவருகிறது. முன் காலத்தில்இந்தியாவில் இருந்த சர்வகலாசாலைகளிலும், இப்போதிருக்கும் வேத பாடசாலைகளிலும் அது தான் வழக்கம். தகுதியில்லாத மாணுக்கனைத் தேறினதாகச் சொல்லவேண்டிய அவசியம் என்ன? அப்படி ஏதாவது காரணம் இருக்குமாயின், அக்காரணத்தை விலக்கவேண்டும். ஆனல் ஒருவேளை கற்பித்த உபாத்திமாரே பரீக்ஷிக்கக்கூடாது என்றும் எல்லாக்கல்லூரிகளிலும் ஒரே மாதிரியான பரீக்ஷயில் எப்படித் தேறுகிறுர்கள் என்றும் பார்க்கவேண்டும் என்று அபிப்பிராயமானுல், நியமிக்கப்பட்ட பரீக்ஷகர்கள் விஷயங்களை மாணுக்கர்கள் கூடிய மட்டில் அறிந்திருக்கிறுர்களா என்று பார்க்கிறவர்களா யிருக்கவேண்டுமே யொழிய, எவ்விதக் கேள்விகளைக் கேட்டால், பெரும்பாலும் மாணுக்கர்கள் பதில் கூற முடியாமல் போவார்கள் என்று நினைக்கிறவர்களாய் இருக்கக்கூடாது.

***

இதை யெல்லாம் உத்தேசித்து, தேசியக்கல்விப் பாடசாலைகளில் தேறிய மாணுக்கர்கள் பரீக்ஷைகளில் தேறிஞர்கள் என்பது எமக்குக் கொஞ்சமும் வியசனத்திற்குக் காரணம் இல்லை. அக்கலாசாலைகளிலிருந்து தேறிவரும் மாணுக்கர்கள் இதா சர்வகலாசாலைகளின் சமானமான வகுப்புகளிலிருந்து தேறிவரும் மாணுக்கர்களுக்கு நிகரா

யாவது, அல்லது உயர்ந்தவர்களாயாவதிருப்பார்கள் என்பது நமது நம்பிக்கை. அப்படிச் சில வருஷங்களில் தேசிய வித்யாசாலைகளின் மேம்பாடானது உறுதிப்படுமானல் இரண்டு விதமான நன்மையானது உண்டாகும். தேசிய வித்யாசாலைகளில் மாணுக்கர்கள் ஏராளமாய்ச் சேர்வார்கள். அவைகளுக்குப் பொருளுதவியும் செய்ய முன் வருவோர்களின் சங்கியையும் அதிகமாகும். தவிரவும், அந்தப் பள்ளிக்கூடங்களைப் பார்த்துச் சென்னைச் சர்வகலாசாலைப் பள்ளிக்கூடங்களிலும் பரீக்ஷைகளில் பெரும்பாலர்களை தேறவிடாமலிருக்கும துர் வழக்கமும் நீங்கும்.

***

இங்கிலாந்தில் ஸ்திரீகளுக்கு வோட் கொடுக்கும் உரிமையானது சென்ற இரண்டு வருஷங்களுக்கு முன் கிடைத்தது அந்த உரிமை வேண்டுமென்று பலவருஷங்களாக விடாமுயற்சியுடன சண்டையிட்டதின் பிரயோஜன மாகும். ஆனால் சிற்சில உத்யோகங்களிலும் பதவிகளிலும் ஸதிரீகளுக்கும் புருஷர்களுக்கும் வித்யாசங்கள் இருந்தன. அவைகளிலும் யாதொரு வித்தியாஸமும் இருக்கக்கூடாது என்றும் இருபாலார்க்கும் சர்வ உரிமைகளிலும் ஸமத்துவம் ஏற்படுத்தவேண்டும் என்றும் காமன்ஸ் சபையில் தீர்மானம் கொண்டுவந்து அது பெரும் பாலர்களால் அங்கிகரிக்கப்பட்டது. அப்படியிருக்க இந்தியாவில் ஜனங்களுக்கு 'வோட்' கொடுக்கும் பாத்தியம் யாருக்குக் கொடுப்பது என்ற விஷயத்தைப் பற்றி பரியாலோசனை செய்து, தங்கள் அபிப்பிராயத்தைக் கூறும்படி லார்டு ஸௌத்பரோ என்ற பிரபுவும் வேறு சிலரும் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் புருஷர்களுக்கு மட்டும் மேற்கூறிய உரிமையைக் கொடுத்தால் போதும்

என்றும் ஸ்திரீகளுக்கு அவ்வுரிமையை இப்போது கொடுக்கவேண்டிய அவசியமில்லை யென்றும், அவ்வித உரிமையைப்பெற வேண்டுமென்று இந்தியஸ்திரீகளில் பெரும்பாலர் கோரவில்லை யென்றும மேல் நாட்டு நாகரீகம் பெற்ற சில ஸ்திரீகளே வேண்டுமென்கிறார்கள் என்றும், அவ்வுரிமையானது கொடுக்கப்பட்டால் அநேகமாய் அந்த உரிமையை உபயோகப்படுத்த மாட்டார்கள் என்றும், கூறிவிட்டார்கள். ஸ்திரீகள் தங்களுக்கு உரிமை வேண்டுமென்று சண்டையிட்ட பிறகு தான் கொடுத்தல் நீதியா? புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் சண்டையும் போட்டியும் உண்டாகும்படி செய்தல் நீதியா? என்று கேள்வி பிறக்கின்றது. மாது ஸ்ரீ பெஸண்டம்மாளும், ஸ்ரீமதி ஸரோஜினி தேவியும், பம்பாயிலிருந்து பல பெண்மணிகளும் இங்கிலாந்து சென்றிருக்கிறார்கள். இந்தியர்களுக்கு முதன் முதல் 'வோட்' செய்யும் உரிமை கொடுக்கும் போதே ஸ்திரீகளுக்கும் உரிமையைக் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி வாதாடி, அப்பாத்தியதையைப் பெறச் சென்றிருக்கிறார்கள். இந்தியாவில் பற்பல பாகங்களிலிருந்து இந்தியஸ்திரீகளின் சங்கங்களிருந்து தீர்மானங்கள் செய்து இங்கிலாந்தில் இந்தியா மந்திரிக்கு அனுப்பப் பெற்றிருக்கின்றன. தவிரவும் இந்தியாவில் கூடிய காங்கிரஸ் முதலிய மகாநாடுகளில் அவ்வுரிமையை ஸ்திரீகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று பேசி யிருக்கிறார்கள.

***

இங்கிலாந்திலும் பொது ஜனங்களுக்கும் ஸ்திரீகளுக்கு உரிமைகள் கொடுப்பதில் விசேஷ ஆக்ஷேபணைகளிருக்காது என்றும் தெரிய வருகிறது. கடைசியில் இவ்வுரிமை கிடைக்கப் பெறுமோ, அறிகிலோம்.

ஆர். அரங்கஸ்வாமி ஐயர்.

பிரஹ்மஞான தரிசனம் (பாலபாடம்)

அத்தியாயம் 44.

எண்ண உருவங்கள்:—தொடர்ச்சி

உலோபியானவன் தன் பேராசையினால் எப்படி அடைபட்டிருக்கிறானோ அப்படியே அதிகமனோவியாகூலமுள்ளவனும் அடைபடுகிறான். ஆனால் இவனுடைய பிரபையைச் சுற்றிலுமுள்ள நிறம் மட்டும் வேறுபடும், அதாவது புகைபோன்ற வர்ணம் சுற்றியிருக்கும். இந்த வர்ணத்தால் சூழப்பட்டிருக்கிற மனிதன் புகைபோன்ற வர்ணப்பீப்பாயில் அடைப்பட்டவனாயிருப்பான். அதைச்சுற்றி அழகற்ற அழுக்கான சாம்பல்நிறமான வளையங்கள் சூழ்ந்திருக்கும். அதனால் அவன் அதிக வியாகூலத்துடன் உட்கார்ந்துகொண்டும், சந்தோஷமான நல்ல எண்ணங்களைத் தன்னிடம் அணுகவொட்டாமல் தடுத்துக்கொண்டும், தன்பேரில் ஒருவரும் அனுதாபப் படுகிறதில்லையென்று இதரர்களைப் பழித்துக்கொண்டுமிருப்பான்.

வஞ்சனையானது பிரபையில் விநோதமான முறுக்குள்ள சாம்பல் நிற எண்ண உருவங்களை உண்டுபண்ணும். எண்ணங்கள் நம்முடைய மனதில் எப்படி ஒன்றின்பின் ஒன்றாக நிலைவரமற்று ஓடுமோ, அப்படியே பிரபையிலுள்ள வர்ணங்கள் அடிக்கடி மாறிக்கொண்டிருப்பதினாலே திவ்விய திருஷ்டியுள்ளவர்களுக்கு மனிதனுடைய உருவமானது ஸ்தூலக்கண்ணுக்குப் புலப்படுவதைவிட அதிக வித்தியாசமாய்த் தோன்றும்.

எண்ணங்கள் எப்போதும் நம்முடைய பிரபையைத் தாக்கிக்கொண்டும் அதனுட் பிரவேசிக்க முயற்சித்துக்கொண்டுமிருக்குமாகையால், மற்றவர்களுக்கு உதவி புரியவும் அதினால் நமக்கு நன்மையுண்டாக்கிக் கொள்ளவும் நல்ல சந்தர்ப்பங்கள் வாய்க்கும்.

ஒவ்வொருவரிடத்தும் ஏதாவது கொஞ்சம் நன்மை யிருக்கும். ஆகையால் கடையனுன மனிதனுக்கும் நாம் அன்பும் நன்மையும் உபகாரமுமுள்ள எண்ணங்களை அனுப்புவோமாகில், ஒருகாலத்தில் அவைகள் அவனிடம் உட்புகும். எவனும் எக்காலத்திலும் கோபமுள்ளவனுகவும் அல்லது பேராசையுள்ளவனுகவும் இருக்கமாட்டான். என்றைக்காவது ஒரு நாள் நம்முடைய பட்சமுள்ள எண்ணங்கள் அவனுட் பிரவேசித்து அவனிடம் ஏற்கனவேயுள்ள நன்மைகளை அதிகப்படுத்தும் இவ்விதம் நல்ல எண்ணத்தை அனுப்புகிறவனுக்கும் அதை அடைகிறவனுக்கும் ஒரு சினேக பந்தம் உண்டாகிறது. அதனுல் அவன் நல்ல கர்மத்தைச் செய்தவனுகிருன்.

ஒரு பெரிய பட்டணத்தை அல்லது ஒரு சிறு கிராமத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கிற ஆகாயத்தில் பெரிய எண்ணக் கூட்டங்கள் எவ்வித மிருக்கக்கூடுமென்று உன் மனதில் உருவகப்படுத்த எப்போதாவது முயற்சி செய்ததுண்டா? நீ அவ்விதம் செய்திராவிட்டால் இப்போது முயன்றுபார். ஒரு விஷயம் தப்பானதென்று பட்டணத்தில் அல்லது கிராமத்திலுள்ள மற்றெல்லா ஜனங்களும் நினைத்துக்கொண்டிருக்கும் போது அவ்விஷயம் சரியானதென்று நினைத்து நீ அதைச் செய்ய முயலுவது எவ்வளவு அசாத்தியமென்பதை அறிவாய். இதர ஜனங்களுடைய எண்ணங்கள் எப்போதும் நம்மைத் தாக்கி நம் மனங்களிற் புகுந்து மறுபடி யதை விட்டு வெளியேறும். அவைகள் வந்துபோன அடையாளங்கள் மட்டும் இருக்கும். இந்தக் காரணத்தினுலே தான் நாம் ஸ்வயமாக நினைப்பது சிரமமாகிறது. நாம் சரியானதென்று நினைக்கும் காரியத்தை மற்றவர்கள் தப்பென்று நினைக்கும் போது நினைத்தபடி நாம் செய்வதும் அவ்வளவு கஷ்டமாயிருக்கின்றது.

இவ்விதமாய் நல்ல ஜனங்கள்கூட அடிக்கடி ஒருவர் மேலில் ஒருவர் அதிகக் கொடுமையைக் காட்டுகிறுர்கள்.

அவர்கள் ஒருவனிடம் ஒரு குற்றத்தைக் காணுகிறார்கள், அதைப்பற்றியே சிந்தனை செய்கிறார்கள். அவன் ஒருபோதும் திருந்தமாட்டானென்று இடைவிடாமல் நினைக்கிறார்கள். இவ்விதமாய் அக்குற்றத்தைப் பலப்படுத்தி அவன் அதை வெல்ல இடமில்லாமல் செய்து விடுகிறார்கள். ஒருவன் பேரில் அநீதியாய்க் குற்றம் சாட்டப்பட்டால் அதன் உண்மை இன்னதென்று தெரிந்து கொள்ளாத ஜனங்கள்கூட அவன் குற்றவாளியென்று தங்களுக்கு உண்மையாய்த் தெரிந்தது போல பாவித்துக்கொண்டு அவன் பேரில் அனேக கெடுதலான எண்ணங்களை எண்ணுகிறார்கள். இதனால் அவன் அதிகத் துன்பத்தையடைகிறான்.

இது இவ்விதமிருப்பதினால் இதற்கு நேர் விரோதமான பலனை எண்ணத்தால் உண்டு பண்ணலாம். நமக்கு விருப்பமிருந்தால் நாம் யாரைப் பற்றி நினைக்கிறோமோ அவர்களிடமிருக்கிற நன்மையை நம்பி அது விருத்தியடைவதாயும் அவர்களுடைய வாழ்க்கையைச் சுகப்படுத்துவதாகவும் மனதில் உருவகப்படுத்தி உதவிபுரியலாம். சிநேகிதர்களாயும் விரோதிகளாயும் நம்மை யறியாதவர்களாயுமிருக்கிற ஜனங்களை இவ்விதமாய் நாம் அணுகி உதவி செய்யலாம். வருங்காலத்துக்கு இவ்விதமாய் நூற்றுக்கணக்கான சிநேகிதர்களை சம்பாதிக்கலாம்.

வி. வெங்குசாமி ஐயர்.

பைண்டு பண்ணின சில பிரதிகள் தான் பாக்கி!

பூர்ணசந்திரோதயம் 4-ஆம் தொகுதி விலை ரூ 2—8—0.

ப. நாராயண ஐயர், புரொபஸர் ஆர். ஸ்ரீனிவாஸையர் எம். ஏ. கே. கோடீசுவரையர், ஆர். எஸ். நாராயணஸாமி ஐயர், பண்டித ம. கோபாலகிருஷ்ணையர், ஆர். சுந்தரராஜ ஐயர் முதலிய அறிவாளர்களால் எழுதப் பெற்ற அரிய பெரிய வியாஸங்கள் கொண்டது. இனிக்கிடைத்தலரிது. முந்துங்கள்!

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

எல்லாம் வல்ல ஈசன்.

உபாத்தியாயர்:— இராமா! மனிதர்களுக்கும் மற்ற பிராணிகளுக்கும் பொதுவான தன்மைகள் யாவை?

இராமன்:—உண்ணுதல், உறங்குதல், தன் இனத்தை விருத்தி செய்தல், ஸந்தோஷம், துக்கம், கோபம் இவைகளை அடைதல்.

உபா.— மற்றப் பிராணிகளிடமிருந்து மனிதனை வித்தியாசப்படுத்துவது யாது?

இரா.— இது நல்லது இது கெட்டதென்று பகுத்தறியும் சக்தி மனிதனுக்கு உண்டு. மற்றப் பிராணிகளுக்கோ அச்சக்தி இல்லை.

உபா.— இது தவிர வேறு ஏதாவதுண்டா?

இரா.— எனக்குத் தெரியவில்லை. தாங்கள் தான் சொல்லவேண்டும்.

உபா.— மற்றப் பிராணிகள் கீழ் நோக்கமொன்றையே புடையனவாயிருக்க, மனிதன் கீழ்ப்பார்வையுடன் மேற்பார்வையும் உடையவன். அதாவது இவ்வுலகம் தவிர, வேறு உலகங்கள் இருப்பதாகவும் தெரிந்து கொள்ளச் சக்தியுள்ளவன். ஈசுவரனை அடையவும் சக்தியுள்ளவன்

இரா.— இவ்வுலகம் தவிர வேறு உலகங்கள் என்று சொன்னீர்களே. அவைகள் யாவை?

உபா.— மேல் உலகங்கள் ஏழு, கீழ் உலகங்கள் ஏழு, ஆகப் பதினான்கு உலகங்கள் உள்ளன. ஆனால் சாதாரண

மாக மனிதன் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் என்று மூன்று உலகங்களிலும் மாறி மாறிச் சஞ்சரிப்பவன் அவனை மூவுலகசஞ்சாரியென்று சொல்வதுண்டு.

இரா.— மற்றவுலகங்கள் யாவை?

உபா.— மற்றவுலங்களைப்பற்றி பின்பு நீ தெரிந்து கொள்ளலாம். இப்போது சொன்னால் உன் மனம் கலங்கும்.

இரா.— ஈசுவரன் எங்கே யிருக்கிறார்?

உபா.— என், நிலக்கடலை, கொட்டைமுத்து இவைக ளிலிருந்து மூக்கியமாய் என்ன கிடைக்கிறது தெரியுமா?

இரா.— எண்ணெய் கிடைக்கிறது.

உபா.— இவைகளில் எந்தப் பாகத்தில் எண்ணெய் இருக்கிறது? எந்தப் பாகத்தில் எண்ணெய் இல்லை என்று சொல்ல முடியுமா?

இரா.— சொல்லமுடியாது. எல்லாப் பாகத்திலும் தான் எண்ணெய் இருக்கிறது.

உபா.— அவ்விதமே இந்தப் பிரபஞ்சத்தில் ஈசுவரன் இல்லாத இடம் கிடையாது. எங்குமிருக்கிறார். பிரஹ்லா தன் சரித்திரம் நீ கேட்டதில்லையோ?

இரா.— கேட்டிருக்கிறேன்.

உபா.— அதைச் சொல்.

இரா.— முன்னொரு காலத்தில் ஹிரண்யகசிபு என்றொரு அசுரராஜன் இருந்தான். அவனுக்கும் அவன் குமாரனான பிரஹ்லாதனுக்கும் ஈசுவரன் விஷயமாக சம்வாதம் வர, ஈசுவரன் தூணிலும், துரும்பிலுமிருப்பதாகப் பிரஹ்லாதன் சொன்னான். அப்படியா என்று ஹிரண்யகசிபு கோபங்கொண்டு பக்கத்திலிருந்த தூணைக்காட்டி "இதிலிருப்பாரா? காட்டுவாயா?" என்று சொல்லி அதைக் காலாலு

தைக்க, ஈசுவரன் தூணிலிருந்து நரசிம்மமூர்த்தியாக வெளியே வந்தாகக் கேட்டிருக்கிறேன்.

உபா.— துரும்பிலும் ஈசுவரன் சக்தி இருக்கிறதென்பதற்கு ஒரு கதை சொல்லுவாயா?

இரா.—எனக்குத் தெரியாது. தாங்களே சொல்லவேண்டும்.

உபா.—பூர்வகாலத்தில் அசுரர்களுக்கும், தேவர்களுக்கும் ஒரு சமயம் சண்டை நேரிடத்தேவர்கள் வெற்றி அடைந்தார்கள். ஆனால் தாங்கள் ஜயித்து விட்டோமென்று மதிமயங்கி, "அவன் (ஈசுவரன்) அன்றி ஓரணுவும் அசையாது," என்ற பழமொழியை மறந்து கர்வம் அடைந்திருந்தார்கள். ஈசுவரன் இவர்களுக்குப் புத்தி கற்பிக்கவேண்டுமென்று கருதி, ஆகாசத்திற்கும் பூமிக்கும் ஒரே ரூபமாக தேவலோகத்தில் தோன்றினார். இதைப் பார்த்த தேவேந்திரன், அக்நிதேவரை அனுப்பி, "யார்" என்று விசாரித்து வரச்சொல்ல, அக்நிபகவான், அந்த ரூபத்தினிடம் சென்றார். அவ்வுருவம் அக்கினியைப் பார்த்து" நீ யார்? "என்று கேட்க, நான் அக்நிதேவன், "எல்லாவற்றையும் எரித்துச் சாம்பலாக்கவல்லவன்" என்று மறுமொழிகூறினன். மேற்படி ரூபம் ஒரு துரும்பை எடுத்துத் தரையில் வைத்து அதை எரிக்கும்படி கட்டளையிட, அவர் தன் பூரண சக்தியுடன் அத்துரும்பைத் தஹிக்க முயற்சி செய்தும் முடியவில்லை. அக்நிதேவன் அவமான மடைந்து, தேவேந்திரனிடம் போய் நடந்ததை அறிவித்தான். பிறகு தேவேந்திரன் வாயுபகவானை அனுப்ப, அவரும் அத்துரும்பை அசைக்கமுடியாமல் அவமானம் அடைந்து, திரும்பி வந்தார். அப்பால் தேவேந்திரன் நேரில் செல்ல, அந்த ரூபம் மறைந்து விட்டது. தேவேந்திரன் இதைப்பற்றி சிந்திக்கலானன். அப்பொழுது பராசக்தி தோன்றி, தேவேந்திரனைப்பார்த்து தேவர்கள் அடைந்த ஜயம் ஈசுவரகிருபையால் ஏற்பட்டதென்பதை மறந்து, அவர்களே

கர்வமடைந்திருப்பதால், அது பிசகு என்றும், எப்பொழுதும் ஈசுவர சிந்தனை இருக்கவேண்டிய தவசியமென்றும், அவர்களுக்கு எடுத்துக்காட்ட, ஈசுவரனே ஒரு ரூபமாகத் தோன்றி, வாயு, அக்கி இவர்கள் கர்வத்தைப் பங்கப்படுத்தினதாகச் சொல்லிமறைந்தான்.

இரா.—ஈசுவரன் சர்வ வியாபகன் என்பதற்கு ஒரு கதை சொல்லப் பிரார்த்திக்கிறேன்.

உபா.—முன்னொரு காலத்தில் மதுரையில் வீற்றிருக்கும் சுந்தரேசக் கடவுள், தன்னுடைய பக்தனான மாணிக்கவாசகர், புட்டுச்செய்து வியாபாரம் செய்து வந்த வாணிய ஸ்திரீ ஒருத்தி ஆகிய இவர்களை இரக்ஷிக்கும் பொருட்டு மண்வெட்டும் கூலிக்காரன் போல் வேஷம்பூண்டு மண்வெட்டி வேலைசெய்ய, சரியாய் வேலை செய்யவில்லையென்று அரசன் நேரில் வந்து கண்டித்தார். கேட்காமல் முன்போலவே அஜாக்கிரதையாக வேலை செய்தார். அரசன் சினங்கொண்டு அவர்முதுகில் பிரம்பாலடிக்க, அவ்வரசனும் மற்றும் பட்டணத்திலுள்ள ஜனங்கள் ஒவ்வொருவரும் தம் தம் முதுகில் பிரம்படி பட்டதாக உணர்ந்தார்கள். தக்ஷணமே அக்கூலியாளைக் காண முடியவில்லை. அதன்பேரில் கூலி ஆளாக வந்தவர் சுந்தரேசக்கடவுள் தான் என்று அரசன் உணர்ந்தான்.

இரா.—ஈசுவரன் அடிபட்டால் மனிதர்கள் தாங்களும் அடிபட்டது போல் உணர்வதற்குக் காரணம் என்ன?

உபா.—ஈசுவரன் ஸர்வந்தர்யாமி ஸர்வப்பிராணிகளின் ஹிருதய கமலங்களிலும் வசிப்பவன். ஸர்வசிருஷ்டி ஸ்திதி லயங்களுக்கும் ஆதாரமானவன். பெரிய விருக்ஷத்துக்கு ஆதாரமான வேரில் விஷத்தைப் பாய்ச்சினால், விருக்ஷம் முழுமையும் அவ்விஷத்தால் வாடி நாசமடைகின்றது. நகர முழுமைக்கும் தண்ணீர் வரக்கூடிய ஆதாரமான தண்ணீர்த் தொட்டியில் விஷங்கலந்தாலும், மருந்து கலந்தாலும், நகர முழுமையும் அப்பயனையடைகின்றது. இதுபோலவே,

ஸர்வஜகத்திற்கும் ஆதாரமான ஈசுவரன் மேற் பட்டு அடி, அவன் அம்சமாகவும், அவன் ஸ்ருஷ்டியாயும், அவனால் ஆதரிக்கப்பட்டும் வருகிற ஒவ்வொருவன் மேலும் விழுந்தது.

சூரியகிரணம் படக்கூடிய இடத்தில் தண்ணீர் நிறைந்த பல பாத்திரங்களை வைத்தால் ஒவ்வொரு பாத்திரத்திலும் ஒவ்வொரு சூர்யப்பிரதிபிம்பந் தோன்று வதைப்பார்க்கிறோம். அப்பால் பலபாத்திரங்களிலுள்ள தண்ணீரை ஒரு பெரிய பாத்திரத்தில் விட்டால் ஒரே சூர்யப் பிரதிபிம்பந்தோன்கிறது. அந்தப் பாத்திரத்தையும் சூர்யகிரணம் படாதயிடத்தில் வைத்துவிட்டால் சூர்யன் மட்டும் தோன்றுகிறார். பிரதிபிம்பத்தைக் காணோம். இவ்விதமே ஈசுவரனுடைய பிரதிபிம்பம் பலசரீரங்களான பாத்திரங்களில் தோன்றுவதில் அப்பிரதிபிம்பங்கள் தான் ஜீவர்கள். அதாவது சரீரமாகிய வீட்டில் குடியிருப்பவன் ஜீவன்.

இரா.—ஜீவன் சரீரத்துக்குள் குடியிருப்பவன் என்றால் ஜீவன்வேறு, சரீரம் வேறு என்று எனக்கு தெரிய வில்லையே.

உபா.—ஒருவனைப்பார்த்து அவன் சரீரம், கண், காது முதலியவைகளை யாருடையவை யென்று கேட்டால், "என் கண், என் காது, என் சரீரம் என்று சொல்லிவருவதைப் பார்க்கிறோம். அதனால், தான் வேறு, தன்சரீரம் வேறு, என்று உணர்ந்து பதில் சொல்வதாகத் தெரிகிறது. அப்படி 'தான்' என்று நினைத்துச்சொல்லுவது ஜீவன்.

இரா.—அப்படியானால், ஜீவன் சரீரத்தினின்று பிரிக் கக்கூடாத நிலைமையில் இருப்பதாக அல்லவோ எனக்குத் தெரியவருகிறது. கொஞ்சம் விவரமாய்ச் சொல்லக்கோரு கிறேன்.

உபா.—புளியங்காய், புளியம்பழம் இவைகளுக்குள்ள வித்தியாசம் தெரியுமா?

இரா.—புளியங்காயிலுள்ள சதை ஓடு இவைகள் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்கமுடியாத ஸ்திதியில் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. பழத்திலோ அவ்விதமில்லாமல் சதை ஓட்டுடன் ஒட்டாமல் விலகி இருக்கிறது. அவ்விதமே சதையும் அதிலுள்ள கொட்டையும் ஒன்றுடன் ஒன்று ஒட்டாமல் எளிதாய் விலகி விடுகின்றன. கொட்டையின் மேலுள்ளதோடும் அவ்விதமே விலகக்கூடியது.

உபா.—இதற்குக்காரணம் தெரியுமா?

இரா.—காயில் தண்ணீர்ப்பசை ஜாஸ்தியாய் இருப்பதால் உள்ளிருக்கும் சதையையும் தோட்டையும் பிரிக்க வொட்டாமல் ஒட்டிக்கொள்ளும்படி செய்கிறது. பழத்திலோ தண்ணீர் வற்றி உலர்ந்து போவதனுல் சதை வேறு தோடுவேறு, கொட்டை வேறு கொட்டையின் மேலுள்ள தோடு வேருகப் பிரியக் காரணம் ஏற்படுகிறது.

உபா.—இது போலவே ஜீவனும் அவன் சரீரங்களும் பிரிவை அடையலாம்.

இரா.—சரீரங்கள் என்று சொன்னீர்களே. அவை யாவை? எத்தனை சரீரங்கள் உண்டு?

உபா.—புளியம்பழத்தில் தோடு, சதை, அதிலுள்ள கொட்டை, கொட்டையின் பேரிலுள்ள தோடு, அப்பால் பருப்பு, இருப்பதுபோல், மனிதனுக்கும் (ஜீவனுக்கும்) ஸ்தூல சரீரம், ஸூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் என மூன்று சரீரங்கள் இருக்கின்றன. காரண சரீரத்திற்குள் ஜீவனிருக்கிறுன்.

இரா.—ஜீவன், புளியம் பருப்புப் போன்ற ரூபமுடையவனு?

உபா.—அப்படியல்ல; தேஜஸ் ஸ்வரூபியாகக் காரண சரீரத்திற்குள் பிரகாசித்துக் கொண்டிருக்கிறன். ஆனல் அம்மூன்று சரீரத்திற்கும் அத்தேஜஸ் பரவும்.

இரா.—தேஜஸ்வரூபி என்றல் என்றுல் ஒன்ன?

உபா.— பிரகாசமானவன். அதாவது சூர்யகாந்தி போன்றவன். இலாந்தலுக்குள் வைக்கப்பட்ட கண்ணுடி விளக்கில் தெரியும் தீபம்போல் பிரகாசிப்பவன்.

இரா.—அப்படிப் பிரகாசிப்பதாக எனக்குத் தெரிய வில்லையே? அது ஏன்?

உபா:-இலாந்தல் கண்ணுடியில் அழுக்கேறி இருந்தால் எவ்விதம் உள்ளிருக்கும் வெளிச்சம் வெளியில் தெரியாதோ, அதுபோல ஸூக்ஷ்மசரீரத்துக்குள் உள்ள புத்தியாகிய கண்ணுடியில் சுயலாபங் கருதும் எண்ணங்களான, காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாச்சரியமாகிய, துர் எண்ணங்களாகிய அழுக்கு வெகுவாய்ப் பற்றி யிருப்பதால், உள்ளே யிருக்கும் வெளிச்சத்தைச் சாதாரண மனிதன் பார்க்க முடியவில்லை. நிர்மலனுன ஞானிக்கு அவ் வெளிச்சம் ப்ரத்யக்ஷமாய் விளங்குகின்றது. மேற்படி அவகுணங்கள் சூரியனை மேகம் மறைப்பது போல் மறைத்து விடுகின்றன. ஆகையால் எப்போதும் பரோபகார சிந்தையுடன் அத்துர்க்குணங்களை நாளடைவில் தன்னை விட்டு விலக்க ஒவ்வொருவரும் முயற்சிப்பது நலம். அவ்விதம் கடவுள் அருள்புரிவாராக.

இரா.—புளியம்பழம், புளியங்காய் இவைகளின் தன்மையில் விததியாஸம் தண்ணீர் சம்மந்தத்தால் ஏற்பட்டதாக நான் உணர்ந்தேன். அவ்விதம் ஜீவனை அவன் சரீரங்களிலிருநது பிரிக்கக்கூடிய தன்மையிலிருப்பது யாது?

உபா.—புளியங்காயிலுள்ள தண்ணீர் வற்றுவது போல், சரீரங்களிலுள்ள ஆசை அல்லது பற்றுதல் ஜீவனை விட்டு விலகுமானல் அவன் (அதாவது ஜீவன்) சரீரங்களை

விட்டு வேறுபடுவான். அப்பொழுது ஈசுவரனை அடைவான்.

இரா.—ஆசை அற்றுப்போவதென்றால் என்ன?

உபா.—உலகப்பொருள்களில் முற்றும் பற்றை யொழித்து, த்வேஷபுத்தியின்றி அபிமானம் அற்று, மண் முதலிய தாதுவர்க்கம், புல்பூண்டு முதலிய ஸ்தாவரம், ஊர்வன, நடப்பன, பறப்பனவாகிய ஜங்கமங்கள் மனிதவர்க்கம் இவைகள் எல்லாவற்றையும் சம திருஷ்டியாய்ப் பார்த்தும், ஈசுவரனை எல்லாவற்றிலும் பார்த்தும், ஒரு பிராணிக்கும் ஹிம்சையின்றி பரோபகார சிந்தையுடன் நடத்தல். அவன் இங்கே சரீரத்திலிருக்கையிலேயே சுவர்க்கலோக சுகத்தை அனுபவிக்கக்கூடியவன்.

இரா.—மேற்சொன்ன மூன்று உலகங்களுக்கும் மூன்று சரீரங்களுக்கும் சம்மந்த மென்ன?

உபா.—ஸ்தூல சரீரத்தினால் பூலோக அனுபவத்தையும் ஸூக்ஷ்மசரீரத்தினால் புவர்லோக அனுபவத்தையும் காரண சரீரத்தினால் சுவர்லோக அனுபவத்தையும் ஜீவன் அனுபவிக்கிறான் பூமியில் சஞ்சரிப்பதற்கு வண்டி போலும், தண்ணீரில் பிரயாணஞ் செய்யப் படகுபோலும், ஆகாயத்தில் செல்ல ஆகாய விமானம் போலும், மனிதன் வெவ்வேறு சரீரத்தை வெவ்வேறு உலகத்திற்கு உபயோகப் படுத்திக் கொள்ளுகிறான்.

இரா.—சரீரத்தில் அபிமானம் அற்றவனுக்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லக் கோருகிறேன்.

உபா.—முன்னொருகாலத்தில் ஒரு பெரிய வியாபாரி இருந்தார். அவர் ஒரு சன்னியாசியின் உபதேசத்தின் பேரில் வியாபாரத்தொழிலை ஒழித்து நிஷ்டையில் புகுந்தார். ஒரு சமயம், அவர் ஒரு பிள்ளையார் கோவிலில் நிஷ்டையில் இருக்கையில் சில திருடர்கள் தாங்கள் ராஜகிரகத்தில் கொள்ளையடித்து வந்த தனத்தில் முத்துஹாரம் ஒன்றைத்

தாங்கள் முன் பிரார்த்தனை செய்து கொண்டபடி இருட்டில் பிள்ளையார் விக்கிரகத்தின் கழுத்தில் போடுவதாக எண்ணிப் பக்கத்தில் நிஷ்டையிலிருந்த அவ்வணிகன் கழுத்தில் போட்டு விட்டுப் போய்விட்டார்கள். காலையில் அரசன் அரண்மனையில் முன்னிரவில் களவுபோனதாகக் காவற்காரர்கள் அறிந்து தடம் பற்றி வர, அக்கால் தடம் பிள்ளையார் கோவில் வரை வந்ததில் காவலாளர்கள் பிள்ளையார் கோவிலை அடைந்தார்கள். அவ்விடத்தில் வணிகன் கழுத்தில் முத்து மாலை இருப்பதைக்கண்டு அவரைத்திருடனென்று மதித்து அடித்தார்கள். அவருக்கு நிஷ்டை கலைந்து தன் சரீரத்தைப்பார்த்து "முத்துமாலை போட்டுக் கொண்ட பயலே அடிபடு, அடிபடு" என்று தான் வேறு, சரீரம் வேறு, என்று உணர்ந்து சொன்னார். சரீரத்தில் அவருக்கு அபிமானம் இல்லாததால் அடியின் வலியை அவர் உணரவில்லை. இவர்தான் பட்டினத்துப் பிள்ளை என்ற ஞானி.

இரா.—மரணம் அடைவதென்றால் என்ன?

உபா.—ஸ்தூல சரீரத்தை மற்ற இரண்டு சரீரங்களுடன் சேர்த்துக் கட்டியிருந்த பிராணக்கயிறு அறுபட சூக்ஷ்ம காரண சரீரங்களுடன் ஸ்தூல சரீரத்தை விட்டு ஜீவன் வெளியேறி விட்டார் என்று அர்த்தம்.

இரா.—ஜீவன் விஷயமாகத் தாங்கள் என் மனதில் பதியும்படி எடுத்துரைத்ததற்காகத் தங்களை நமஸ்கரிக்கிறேன். தாங்கள் தங்கள் அநுக்கிரஹம் என்னிடத்தில் எப்பொழுதும் இருக்கும்படி கடாக்ஷித்தருளவேண்டும் என்று மனதாரப் பிரார்த்திக்கிறேன்.

உபா.—நல்லது சந்தோஷம், போய்வா. என்னால் கூடிய உதவியை உனக்குச்செய்ய நான் எப்போதும் சித்தமாயிருக்கிறேன்.

சுபமஸ்து.

கே. எஸ். இராமசந்திரையர்,

किं कर्म किमकर्मेति कवयोऽप्यत्र मोहिताः ।

[கீதை 4—16]

என்றபடி இவ்விரு கேள்விகளுக்கும் சரியான விடையளிப்பது மஹான்களுக்குக் கூட அசாத்யமான காரியம். அப்படியிருக்கச் சாதாரண மனிதர்க்கு எப்படி சாத்தியமாகும்? உலகந்தோன்றிய காலம் முதல் எது சரி, எது தவறு என்ற தர்க்கம் நடந்து கொண்டேயிருக்கின்றது. இன்னும் நடக்கத்தான் போகிறது. ஒரு நாளும் தீரப்போவதுமில்லை. ஆனால் ஒன்று நிச்சயம். ஒவ்வொருவனும் தனக்குப் பிடித்தது தான் சரி, பிடிக்காததெல்லாம் தவறு என்று மாத்திரம் உறுதியாய்ச் சொல்லுகிறான். இது மனிதரின் இயற்கை. தன் நயமே கருதாது

लोकाः समस्ताः सुखिनो भवन्तु ।
परोपकाराय इदं शरीरम् ।

உலகங்கள் எல்லாம் சுகமடையவேண்டும். பரோபகாரத்திற்காகத் தான் இத்தேகம் எடுத்தேன் என்ற கொள்கைகளைக் கொண்ட ஸர்வோபகாரிகள், உலக அறிவாலும், அநுபவத்தாலும் சில விதிகளை, ஒருவிதமாய், கற்பித்திருக்கிறார்கள்.

அவையாவன:—

I ஸமத்வம்.

आत्मवत्सर्वभूतेषु यःपश्यति स पश्यति ।

தன்னைப்போல் பிறரையும் பாராட்டுபவனே நல்ல அறிஞன்

(2) Do as you would be done by. [Bible]

பிறர் உன்னிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்புவாயோ, அவ்வாறே நீயும் பிறரிடம் நடந்து கொள்ளவேண்டும்.

ईक्षते योगयुक्तात्मा सर्वत्र समदर्शनः।

[கீதை 6—29]

யோகிகளுக்கு, எல்லாம் ஒரேமாதிரியாய் (ஸமமாய்) தோன்றும்.

आत्मौपम्येन सर्वत्र समं पश्यति योऽर्जुन।
सुखंवा यदिवा दुःखं स योगी परमो मतः॥

[கீதை 6—32]

தன்னைப்போல் எல்லோரையும் (சுகதுக்கங்களையும்) சமமாய்ப் பாராட்டுபவனே பரமயோகி.

II அஹிம்ஸா.

अहिंसा परमो धर्मः

பிறருக்கு (உபகாரமில்லாவிட்டாலும்), அபகாரம் செய்யாமலாவது இருப்பதே பெரிய தர்மம்.

अष्टादश पुराणेषु व्यासस्य वचनद्वयं।
परोपकारः पुण्याय पापाय परपीडनम्॥

பதினெண் புராணங்களிலும், வியாஸர் கூறுவது இரண்டு வசனந்தான்.

1. பரோபகாரமே புண்யம்.
2. பிறரை ஹிம்சிப்பது பாபம்.

III பரோபகாரம்.

கூடியவரை பிறர்க்குதவி செய்தல். உலக வாழ்வில் இயல்பாய்ப் பல இடையூறுகள் இருக்கின்றன. இவை தெய்வாதீனமேயொழிய, மனுஷ்யாதீனமல்ல. இத்துடன், ஸ்வயங்க்ருதமாய்ச் சில சங்கடங்களை உண்டுபண்

ணிக்கொண்டும், தானும் கெட்டது போக சந்திர புஷ்கரணியையும் கெடுப்பது போல, கஷ்டங்களை விருத்தி செய்வது அறிவிலார் பேதமையே. கூடியவரை மனிதர் பரஸ்பர அன்பு ஆதரவுடன் இருப்பார்களானால் பிரகிருதி குணமான பல இடையூறுகளைத் தம் புத்தித் திறமையால் நிவர்த்தித்துக் கொள்ளலாம்.

ஆத்மலாபம், அல்லது சுயநலம் கருதுவதே, மனிதர் முதலான சகல பிராணிகளுக்கும் பிறவிக் குணம் என்பது சொல்லிக்கொள்ளத் துணியாவிட்டாலும், யாவரும் அறிந்த விஷயம்.

தத்துவத்தை (Natural Law) ஆதாரமாய்க் கொண்டு, மனிதர் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை ஒருவாறு நிர்ணயிக்க முயன்றால், கூடிய வரை நிர்ணயித்தும் விடலாம். இதை மறந்து பேச ஆரம்பித்தால், படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள் கோவில் என்றவாறு, நினைப்பது ஒன்று, பேசுவது ஒன்று, செய்வது ஒன்றாய் முடியும். இவ்விஷயம் மஹான்கள் சரித்திரத்தாலும், மஹான்களெனப் பறையடித்துக்கொள்வோர் சரித்திரத்தாலும், தர்ம ஸம்ஸ்தாபகராலும், தர்ம ஸம்ஸ்தாபனமே தமது கொள்கையெனப் பேசித் திரிவோர் தேச சரித்திரங்களாலும் நன்கு விளங்கும். ஒரே வார்த்தை—

"நானும் சுகமடைய விரும்புகிறேன். நீயும் சுகமடைய விரும்புகிறாய்.

உலகில் எத்தனையோ இடையூறுகளிருக்கின்றன. நாமாய்ச்சில உண்டுபண்ணிக்கொள்ளவேண்டாம். சண்டையிட்டால் இருவரும் அழிந்துபோவோம். ஒற்று உழைத்தால் இருவரும் சுகமடையலாம்."

एते सत्पुरुषा: परार्थघटका: स्वार्थान्परित्यज्य ये।
सामान्यास्तु परार्थमुद्यमभृत: स्वार्थाविरोधेन ये ॥
तेमी मानुष राक्षसा: परहितं स्वार्थाय निघ्नन्ति ये।
ये निघ्नन्ति निरर्थकं परहितं ते के न जानीमहे ॥

[பர்த்ருஹரி நீதிசதகம்]

தம் நன்மையைக் கருதாது பரோபகாரம் செய்பவர் ஸத்புருஷர் (உத்தமர்). தமக்கும் கெடுதியில்லாமல் பரோபகாரமும் செய்பவர் மத்யமர் (ஸாமான்யர்). தம் நன்மைக்காகப் பிறர்க்குக் கெடுதி செய்பவர் அதமர் (மனுஷராக்ஷதர்). தமக்கும் நன்மையில்லாமல் பிறர்க்கு அபகாரம் செய்வரை என்னென்று சொல்லுவது ?

ஆகையால் எது சரி, எது தவறு என்பதைச் சட்டப்படி வரையறுத்துக் கூறமுடியாவிடினும், பெரியோர் வெகுகால அனுபவத்தால் கூறியிருக்கும் வாக்கியங்களாலும், புண்ய புருஷர் சரித்திரங்களாலும் ஒருவாறு ஊஹித்துக் கொள்ளலாம்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்,
B. A. B. L.,

பைண்டு பண்ணின சில பிரதிகள் தான் பாக்கி !

பூர்ணசந்திரோதயம் 4-ஆம் தொகுதி விலை ரூ 2—8—0.

ப. நாராயண ஐயர், புரொபஸர் ஆர். ஸ்ரீனிவாஸையர் எம். ஏ. கே. கோடீசுவரையா, ஆா. எஸ். நாராயணஸாமி ஐயா, பண்டித ம. கோபாலகிருஷ்ணையா, ஆர். சுந்தரராஜ ஐயர் முதலிய அறிவாளர்களால் எழுதப் பெற்ற அரிய பெரிய வியாஸங்கள் கொண்டது. இனிக்கிடைத்தலரிது. முந்துங்கள் !

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

சிறுவர் பக்கம்—ஓர் கதை.

அன்புள்ள ஸ்வர்ணமணிகளே,

ஒரு காலத்தில் ஒரு சிறிய பெண் இருந்தாள். அவள் மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும், நல்லவளாயும், உதவி புரிபவளாயும், இருந்தாள். வீட்டிலிருந்தால் தன் தாய்க்கு அதிக உதவி புரிவாள். பள்ளிக்கூடத்திற்குப் போனாலோ, தன்னுடன் வாசிப்பவர்களுக்கு பென்சல், பலப்பம், ரப்பர் முதலியவைகளை இல்லாதவர்களுக்குக் கொடுப்பாள். எல்லாவித நற்குணங்களும், அவளிடத்தில் பொருந்தியிருந்தன. ஆகையால் அவளை ஸ்வர்ணமணிமாலையின் பளபளப்பான ஒரு மணியென்றே சொல்லலாம்.

ஆனால் அவளிடத்தில் ஒரு குற்றமிருந்தது. அது அவளைப் பெற்றவர்களுக்கு அதிக மனவருத்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அக்குற்றம் என்னவென்றால் பெருக்கிக் கூறுதலாம. அதாவது ஒரு சிறிய விஷயத்தை விபரீதமாகக் கூறுவது. இதுவும் ஒரு விதமான பொய் என்றே சொல்லலாம். ஸ்வர்ணமணிமாலையைச் சேர்ந்தவர்கள் பொய் சொல்லக் கூடாதல்லவா ?

ஒரு நாள், இந்தச் சிறிய பெண் சாயந்திர வேளையில் காட்டிற்கு உலாவப்போனாள. அவ்விடததில் ஒரு தள்ளாத கிழவி ஒரு மரத்தண்டை உட்கார்ந்திருநதாள. அவள் பக்கததில ஒரு விறகு சுமையுமிருந்தது. இந்தப் பெண் கிழவிக்கு உதவி புரிய எண்ணி, விறகு சுமையைத் தான் சுமநது கொண்டு, கிழவி அழைத்துக் கொண்டு போன இடத்திற்குப் போனாள். இனனும அவளுக்குக் கிணற்றிலிருந்து ஜலமும் எடுததுக் கொடுததாள. இந்த உதவிக்காக கிழவி ஒரு வெள்ளி மோதிரம் இனாமாகக கொடுததாள். மோதிரத்தைப பெற்றுக்கொண்டு சநதோஷத்துடன், தன வீட்டிற குப போய் நடந்த விஷயத்தை தன தாய்க்குச் சொன்னாள. தாய் தன் குமாரத்தியின கையில் மோதிரமிலாதிருபபதைக் கண்டு பொய் சொல்லுகிறாளென்று நினைத்தாள்,

அம்மோதிரம் இருப்பது தாயார் கண்ணுக்குத் தெரியவில்லை. தகப்பனாரிடத்திலும், அண்ணனிடத்திலும், தனக்குக் கிடைத்த மோதிரத்தைக் காட்டினாள். அவர்கள் கண்ணிற்கும் அம்மோதிரம் தெரியவில்லை.

இப்படியிருக்க, இந்தப் பெண், பெருக்கிக் கூறுமென்னும் பொய் சொல்லும் போதெல்லாம், அந்த மோதிரம் தன் விரலைக் கொட்டும். ரத்தம் வரும்படியாகக் கொட்டும். இதை யறிந்து அந்தப் பெண் நாளடைவில் அக்குற்றத்தைத் தன்னிடத்தினின்று விலக்கிக்கொண்டு வந்தாள். கடைசியில் அக்குற்றத்தை முழுவதும் விட்டுவிட்டாள்.

மறுபடியுமொரு நாள், அவள் அதே காட்டிற்குச் சாயந்திரம் உலாவச் சென்றாள். அப்பொழுது ஒரு உருவத்தைக் கண்டாள் அந்த உருவம் அவளை இனிய குரலோடும் அன்புடனும் கூப்பிட்டது. அந்தப் பெண் திகைத்து "நீயாரென்று" கேட்டதற்கு "நாம் முன்னமே பழைய சிநேகிதர்கள்" என்று சொன்னது. அந்த உருவம் இன்னும் மென்ன சொன்னதென்றால் "உன்னை எனக்குத் தெரியும். நாங்கள் வனதேவதைகள். மானிடர்களாகிய உங்களை மிகவும் விரும்புகிறோம். ஆனால் நீங்களோ எங்களை உங்களுடன் கூடி வாழாதபடி துரத்திவிடுகிறீர்கள். உங்களுடைய கெட்ட செயல்களாலும், கெட்ட சொற்களாலும், எங்களைக் கிட்ட அணுகாதபடி செய்கிறீர்கள். ஆனால், உன்னைப் போல மேன்மையான எண்ணங்களும், இனிமையான சொற்களும், நல்ல செயல்களு முள்ளவர்களைச் சேர்ந்து, சமயத்தில் உங்களுக்கு உதவிபுரிவோம். அதனால் தான் நான் ஒரு கிழவி ரூபமெடுத்து வந்து உன்னிடத்தினின்று பெருக்கிக் கூறுமென்னும் குற்றத்தை நிவர்த்தி செய்ய உனக்கொரு வெள்ளி மோதிரத்தைப் பரிசாகக் கொடுத்தேன். அதனால நீ அக்குற்றத்தை விட்டுவிட்டாய். இனி உனக்கு அது தேவையில்லை. மற்ற பிள்ளைகளுக்கு உபயோகமாகும்படி அதை உன்னிடத்தினின்று வாங்கிப் போக வந்தேன். அதற்குப் பதிலாக தேவதைகளையும், தேவகன்னிகைகளையும், பார்க்கும்படியான சக்தி உனக்குக் கொடுத்தேன்" என்று சொன்னது.

அந்தப் பெண் வீட்டிற்குத் திரும்பிப்போனுள். அந்த நாள் முதல் அவளைக் கண்டு யாதொரு ஜீவபிராணியும் பயந்து ஓடுகிறதில்லை. பட்சிகளின் பாட்டுகளும் அவளுக்கு அர்த்தமாகும்.

இந்த சக்தியெல்லாம் அவளுக்கெப்படி வந்தது? நற்குணம் நற்செயல்களால் தானே? எப்படி அந்தப் பெண்ணுக்கு தேவதரிசனம் கிடைத்ததோ அதே மாதிரி நீங்களும் மேன்மையான எண்ணமுடையவர்களாயும், இனிமையான சொற்களையுடையவர்களாயும், நல்ல செயல்களுமுடையவர்களாயுமிருந்தால், வனதேவதை முதலிய தரிசன மட்டுமல்ல, ஈசுவர தரிசனமும் கிடைக்கும்.

சொர்ணவேலன்.

புத்தக விமர்சம்.

மாணிக்கவாசகர்:— மதுரை ஒய். எம். ஏ. ஏ. இரண்டாவது பிரசுரம்—வடுவூர். கி. துரைசாமி ஐயங்கார், பி. ஏ. இயற்றிய நாடகம்—விலை அணு 8. வரகவி. திரு அ. சுப்ரமணிய பாரதி எழுதிய நான் முகத்துடன் கூடியது.

மதுரை ஒய். எம். ஏ. ஏ. சபையார் தமிழுலகுக்கு ஒரு பேருதவி செய்துவருகின்றனர். வருஷத்திற்கு ஒரு முறை புதிய நாடகங்கள் எழுதியனுப்பும்படி விளம்பரம் செய்து, அவைகளில் சிறந்தது எது என்று பரீக்ஷகர்களால் தேர்ந்தெடுத்து, அதற்குத் தங்கப்பதக்கம் பரிசிலளித்து வருகின்றனர். இதற்கு முந்திய வருஷம் குடும்ப சம்பவ விஷமாய் நாடகங்கள் எழுதியனுப்பும்படி விளம்பரம் செய்து அவைகளுள் சிறந்ததற்கு பரிசில் அளித்தார்கள். இம்முறையோ, திருவிளையாடற் புராணக்கதைகளில் ஒன்றை நாடகமாய் எழுதியனுப்பும்படி பிரகடனம் செய்தனர். அதற்கு இணங்கிப் பல நாடகங்கள் இயற்றியனுப்பப் பெற்றன. அவைகளில் சிறந்ததென அறிஞர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற நாடகமாகும் இந்த "மாணிக்கவாசகர்" என்ற புத்தகம். இவ்வாசிரியர் இதற்கு முன்னமேயே பற்பல

நாடகங்கள் இயற்றிக் கைதேர்ந்தவர். பிரிடிஷ் இந்தியா பிரஸ்ஸில் அச்சடிக்கப்பெற்ற இந்நாடகம் மனதைக் கவரும்படிவெகு ரமணீயமாயும் அச்சுப் பிழையின்றியும் இருக்கிறது.

மாணிக்கவாசகர் திருக்கதையை அறியாதவர் பெரும்பாலும் இல்லை என்று சொல்லத்தகும். மதுரை சுந்தரேசக் கடவுளின் திருவிளையாடல்களில் சிறந்த இரண்டு திருவிளையாடல்கள் இக்கதையில் கையாளப் பட்டிருக்கின்றன. நரியைப்பரியாக்கினதும், பிட்டுக்கு மண்சுமந்ததும், பண்டிதர்களுக்கு மட்டுமேயன்றி, பாமரர்களுக்கும் வருடந்தோறும் ஆவணி மாதத்திருவிழாவில் சுந்தரேசக்கடவுளின் திருவிளையாடல்களை ரூபகமாய் நடித்துக்காட்டுவதால், தெரியும். ஆகையால் அக்கதையை இங்கு விவரித்துக்கூறுவது மிகையாகும். அக்கதையையே அழகிய நடையில், புதிய பாடல்களுடன், தேவாரத்தினின்றும் திருவாசகத்தினின்றும் நவமணி போன்ற பாசுரங்களைத் தக்கவிடங்களில் புகுத்தி யெழுதப்பெற்ற இச்செந்தமிழ் நாடகத்தைப் பண்டிதரும், மற்றவரும் நேரில் படித்தால் இன்பத்தையும், புண்ணியத்தையும் ஒருங்கே பெறுவார் என்பது எமது துணிபு.

பக்தி ரஸம் மலிந்ததும், சிவமணம் கமழ்கின்றதுமான இந்நாடகரத்தினமானது தமிழபிமானிகள் ஒவ்வொருவரிடமும், சிவநேயச்செல்வர்கள் ஒவ்வொருவரிடமும், இருத்தல் இன்றியமையாதது என்று நாம் திண்ணமாகக் கூறுவோம்.

நாடகங்களின் பிரயோசனம் யாதெனில் காட்சி மூலமாய் இன்பத்தைத்தந்து, மனதைச்சீர்படுத்துவதாகும். இவைகளுடன் பேரின்பப் பேற்றையும் அளிக்கவல்ல இந்நாடகத்தை நடித்துக்காட்டும் சபையார் பொது ஜனங்களுக்கே பேருபகாரம் செய்பவராவர். இவ்வழகிய புஸ்தகத்தின் விலை மிகச்சொற்பம்.

மங்களம்:—மதுரை ஒய். எம். ஏ. ஏ. முதலாவது பிரசுரம். ஒரு பிராமணக்குடும்ப சம்பவங்களை அழகிய நாடகரூபமாகக் காட்டும் சிறிய நாடகம். விலை அணா 4.

மூன்று அங்கங்களும், பதின்மூன்று காட்சிகளும் அடங்கிய இந்நாடகத்தில் வரதக்ஷிணை வாங்குவது என்ற தீயவழக்கத்தினால் ஒரு பெண்ணும், அப்பெண்ணின் தாய்

தகப்பனும் படும் துயரமும், அவள் புருஷன் படித்தவனு யிருந்தும், தன் தகப்பனுடைய வார்த்தையை மீறக்கூடாது என்ற எண்ணத்தினல் அப்பெண்படும் கஷ்டங்களை நீக்கா திருந்ததும், பேசிய வரசுல்கத்தில் ஒரு பகுதியைக் கொடுக்கச் சக்தியற்றுப்போன பிறகும், அந்தப்பணம் வராத போனல் அப்பெண்ணுக்கு ருதிசாந்திக்கல்யாணம் செய்ய அனுமதி கொடுக்கமாட்டேன் என்று சாதித்த அப்பெண் ணின் மாமனரின் வன்மனதும், அப்பெண்மணியின் பொறு மையும், கடைசியில் அவள் கணவன் அப்பெண்ணின் கஷ்ட த்தைக்கண்ணுற நேரிட்டபோது அவன் மனமிளகித்தன்னை நொந்து அவளை ஏற்றதும் இந்நாடகத்தில் கூறப்பட்டிருக் கிறது. இதன் விலை அணு நான்கே. யாவரும் வாங்கிப் படித்துப் பொழுது போக்க ஏற்றது.

பிரஹ்மஞான சபையும் உதயநக்ஷத்திர சங்கமும்.

அத்துவைதி (ஹாஸ்யத்துடன்):— ஐயா, தாங்கள் சில நண்பர்களுடன் சிறிது கால முன் சம்பாஷணை செய்து கொண்டிருந்தது போற்றோன்றுகின்றதே. அது சமயம் என்னையும் தங்களோடு கூட்டிக்கொண்டிருக்கக் கூடாதா? என்ன விஷயங்களைப்பற்றிப் பிரஸ்தாபம் நடந்தது? நான் அறியலாமா?

பிரஹ்மஞான சபை அங்கத்தினன்:— நாங்கள் பேசிக் கொண்டிருந்த விஷயம் தங்களுக்கு உடம்பாடோ வென ஓர் சங்கை யிருந்தது. ஆதலால், தனியாய், அங்கத்தினர் களாகிய நாங்கள் சந்தித்துச் சம்பாஷணை செய்துகொண்டி ருப்பது நலமென நினைத்தேன். வேறொன்றுமில்லை.

அத்:—இருக்கட்டும். என்ன விஷயங்களைப்பற்றிப் பிரஸ்தாபம் அங்கு நடந்தது? அந்த ரகசியம் எனக்குத் தெரியப்படாதா? ஏதோ தாங்கள் உலகளியல்பு, ரிஷிகள், ஜகத்குரு, தற்கால நாகரீகம், முதலியவைகளைப் பற்றி உரையாடினதாகத் தெரிந்தது. ஆனல் சிற்சில வார்த்தை கள் மாத்திரந்தான் என் காதில் விழுந்தன.

அங்—ஆம் ஐயா, நவீன நாகரீகத்தைப் பற்றியும் ஜகத்குருவின வரவைப்பற்றியும் இன்னும் எங்கட்கு அருமையான சில சங்கதிகளைப்பற்றியும் பிரஸ்தாபித்துக கொண்டிருந்தோம். அவையாவும் தங்களுக்கு ஹாஸ்யத்தை விளைவிக்குமென நான் நன்கறிவேன். அதனோடு.—

அத்— (மறுபடியும் புன்னகையுடன்) அடடா! என்னிடமும் அவ்விஷயங்களை யெடுத்துக்கூறி என்னையும் கிருதார்த்தனுகச் செய்யலாகாதா? என் விஷயத்தில் அத்துணை தயவு தங்கட்கு ஏன் ஏற்படவில்லையோ? அவ்வளவுதான் நான் சொல்லலாம்.

அங்— அவ்விதமில்லை. எங்களுடைய பாரமார்த்திக விசாரணையும் பிரஸ்தாபமும், தங்களைப்போன்றவர்கட்கு அற்பமாகத்தோன்றும். அது நிச்சயமென்பதற்குத் தங்களுடைய புன்னகையும் தங்கள் குரலுமே சான்று. எங்களுடைய பக்திக்கும் பூஜைக்கும் அர்ஹமான விஷயங்கள் தங்களுடைய நிந்தனைக்கும் அருவருப்புக்கும் இலக்காகும் என்று பயந்தேன். ஆதலால், இதைப்பற்றி நாம உரையாடுவதிற் பயன் யாது? இதுபோலவே, தங்களுடைய கொள்கைகளை நான் ஏளனஞ்செய்ய முடியாதா? செய்யலாம். பலமுறை இவ்விஷயங்களைத் தாங்கள் இகழ்ந்திருக்கிறீர்கள். ஆயினும் நாங்கள் வேண்டுமென்றே சும்மாயிருந்துவிட்டோம். தங்களுடைய இந்த மனோநிலையில், நாங்கள் கூறும் எவ்விஷயத்தையாவது பொருட்படுத்துவீர்களா? மாட்டீர்கள். ஆதலால், தங்களோடு அவ்விஷயங்களைப் பற்றிப் பேசுவதால் நன்மையில்லை. தீமைதான் ஏற்படும்.

அத்— நல்ல விஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டிருப்பதால், தீமையே விளையுமென்பது தங்கள நூதன சித்தாந்தங்களி லொன்றுயிருக்கலாம்! ஆயினும், அஃது எவ்விதம் தீமையை விளைவிக்கும் என்று என் சிற்றறிவுக்குப் புலப்படவில்லை!

அக்— இவ்விதப் பிரஸ்தாபம் நல்ல விஷயமென்று தாங்கள் ஏற்றுக்கொண்டதே நாங்கள் எதிர்பாராததோர் பாக்கியம்! ஆன்மார்த்த விஷயங்களைப்பற்றிச் செய்யப்படும் விசாரணை மாசிலாமனத்துடனும் உயர்ந்த பக்தி சிரத்தையுடனும், உண்மையை யறிந்து அதனை அனுஷ்டானஞ் செய்யவேண்டுமென்ற பேரவாவுடனும் செய்யப்படவேண்டும். விளையாட்டாகவோ அல்லது தனது சொல்லாற்றலைக் காட்டவோ இவ்வரும் பெரும் விஷயங்களைப்பற்றித் தர்க்கித்தலும் சண்டை செய்தலும் கூடாது. உதாரணமாய், ஜகத்குரு என்ற பெரியார் ஒருவர் சமீபகாலத்தில் உலகில் தோன்றுவார் என்ற கொள்கையையுடையவன் நான். இதைத்தாங்களறிந்திருப்பீர்கள். (ஏற்கனவே நான் சொன்ன பிரகாரம் இதைப்பற்றியும் என் ஆப்த நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன்) இது விஷயத்தில் எங்கள் நம்பிக்கை உண்மையென்று ஒரு நிமிடநேரம் பாவித்துக் கொள்ளுங்கள். அப்பெரியார் வருதலினால் நமக்குறும் பயன்யாது? அதன் பொருட்டு நாம் செய்யவேண்டிய கிருத்தியங்கள் யாதேனுமுளவோ? அவ்வாறிருப்பின், எவ்வாறு அவை செய்யப்படவேண்டும்? என்ற இது போன்ற வினாக்களைப்பற்றி ஆலோசித்த லவசியம். அவ்வாறின்றி, இவை உண்மையா யிருத்தலைத் தாங்கள் அறியாத காரணத்தாலோ அலக்ஷிய புத்தியினாலோ இகழ்ந்துவிட்டால் பெரியாரைப்பழித்த குற்றம் ஏற்படுமன்றோ? ஏன் இந்த தீக்கருமம் செய்யவேண்டும்? அன்றியும் இவை உண்மையென்று நம்புகின்ற எங்களுக்குத் தங்கள் நிந்தனை மொழியால் மனஸ்தாபமும் ஜனிக்கும். ஆதலால் நேர்மையான மனப்பான்மையுடன் இவற்றை விசாரியாது, ஏளனஞ் செய்வதனால், தீமையுண்டாகுமென்றேன். ஆனால், நல்ல விஷயங்களைப்பற்றி வசனிப்பதால், தீமை விளையுமென்று நான் சித்தாந்தங் கொண்டிருப்பதாகத் தாங்கள் நினைப்பதும் கூறுவதும் பிழையே. எதைப் பற்றியும் நிஷ்களங்கமாயும் அன்பாயும் பேசுதல் எப்பொழுதும் நன்மையைத் தரும். பிறகு தங்கள் சித்தம். இவையாவும் தங்களுக்குத் தெரியாத விஷயங்களல்ல.

அத்— தாங்கள் கூறுவது உண்மையே. நான் உண்மையைத்தான் அறிய விரும்புகிறேன். கூசாமல் தங்கள் சபை விஷயங்களைப்பற்றியுள்ள என் சில சங்கைகளைத் தெரிவிக்கின்றேன். தாங்கள் தகுந்த உத்தரங்கொடுங்கள், அவை என்யுக்திக்குப் பொருத்தமானால் ஏற்றுக் கொள்கின்றேன். இல்லாவிடின்—

அங்—அவற்றைத் தாங்கள் இகழவேண்டாம். நான் பிரார்த்திப்பது அதுதான். அபிப்பிராய பேதத்தினாலும், கொள்கை பேதத்தினாலும், நமது அன்பும் சிநேகமும் குன்றுவது சரியாகாது. அன்றியும், நான் தரும் விடைகள் தங்களுக்குத் திருப்தியைக் கொடாவிடினும் தாங்கள் இவ் விஷயங்களைப்பற்றி இடைவிடாது விசாரித்தல் பெரும் பயனைத்தரும்.

அத்— அது எனக்குச் சம்மதமே. ஆயினும் தாங்கள கூறும் விஷயம் நமது ஹிந்து மதத்திற்கு உடம்பாடான சங்கதிகள் தானே? அல்லது ஒருக்கால் அதற்கு முரணுயுமிருக்குமோ?

அங்—தங்களுக்கு அவ்வித ஐயம் வேண்டாம். நமது ஆன்றோருடைய கருத்துக்களுக்கு முரணாய் ஒருகாலும் அஃது இராது. ஆனால் ஓர் விஷயம் மாத்திரம் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஹிந்து சமயமென்பது பல உள்மதங்களுடையது. துவைதம், அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், சைவம், வைணவம் முதலிய பாவும் அதன கண அடங்கியுள்ளன: இந்த ஒவ்வொரு பாகமும் தான் தான் இந்து மதமென்றும் ஏனைய யாவும் புறச்சமயங்களென்றும கூறுகின்றன. ஆயினும் நான்கூறும் விஷயங்கள் இவற்றிற்கும் அன்னிய மதங்கட்கும் சமாசமாயிருக்கும். புறச்சமயம என அவறறை தள்ளிவிடலாகாது. ஏனெனில் மதங்கள் யாவும் இறைவனடியார் களிடமிருந்து தோன்றிய வைகளே.

அத்— அதுவும் சரி. ஆயினும் அவை யுக்தி அனுபவம் இவற்றிற்குப் பொருத்தமாயிருக்கவேண்டும்.

அங்—சம்மதம்.

ஆர். பஞ்சாபகேசையர்.

ஸ்ரீ ராமஜெயம்.

புது ஜவுளிக்கடை நோட்டீஸ்.

மூ. ரா. பெருமாளய்யர்

மேலக்கோபுரவாசல் தெரு, மதுரை

மதுரை மேலக்கோபுரவாசல் தெரு டோர் நிம்பர் 113, தென்சரகில் முன் டிப்டி கலெக்டராயிருந்த மகா-ா-ஸ்ரீ ராமாராயரவர்கள் பெரியமாடி கிரஹத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஜவுளிக்கடையில் அநேக ஊர்களிலிருந்து வரும் பட்டுச்சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், பட்டுக்கரையிலும், சாதாவிலும், ஜரிகையிலும், வேஷ்டி ஜோடி, துப்பட்டா, தினுசுகளும், உள்ளூரில் தயாராகும் ஜரிகை, சாதா, டோரியா, சுன்னடி, சேலை, சித்தாடை, ரவிக்கை, தினுசுளும் 150, 200 நிம்பர் நூலில் ஜரிகைஜோடி, துப்பட்டாக்களும், சாயவேஷ்டி, தினுசுகளும் இன்னும் அநேக ஜவுளி தினுசுகளும் விலை சலீசாகவும் நயமான ஜவுளிகளாகவும் சொற்பலாபத்திற்கு விசேஷ வியாபாரம் செய்து கொண்டு வருகின்றமையால் தேவையானவர்கள் எங்கள் ஜவுளிக்கடைக்கு வந்து வேண்டிய தினுசுகளை வாங்கிக் கொள்வீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

☞ N. B.—அயலூர்களிலிருந்து கடிதமூலமாய் வரும் ஆர்டர்களை உடனே கவனித்து அதிக பந்தோபஸ்தாய் வி. பி. பார்சல் மூலமாய் ஜவுளி தினுசுகள் அனுப்பக்கூடும். எங்கள் ஜவுளி விலை விபர ஜாப்தா (கேட்லாக்) வேண்டுமானால் இனமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தியாவில் மிகப்பெரிதும்

பழமையுமான வைத்யசாலை எது?

1881-ஹூ௵ ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ரஹ

ஔஷதாலயம்

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ர

300 மாத்திரை

கொண்ட டப்பி

1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு நன்ருய் ஆலோசனைசெய்துதிருப்தியான விடைகொடுக்கிருேம்.

கடிதங்களுக்கு உடனே பதில எழுதப்படும்

இநத

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிருர்கள்.

மூதன்மையான

மருந்து சென்ற 35 ஹூ காலமாய் உபயோகிப் போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்துதேகபலத்தையும் மனேவன்மையையும் கொடுதது பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள

32 மாத்ரையின் விலை ரூ 1

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்கிரக
ஔஷதாலயம்
45, மேலக் கோபுர வீதி
மதுரை.

இருமல், கபம்

காசம் இவைகளுக்கு சிறந்தமருந்து

காசாந்தக

மாத்ரைகள் டப்பிக்குவிலை ரூ 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிருேம்

மதுரை ஒய். எம். ஏ. ஏ. பிரசுரங்கள்

தங்க மேடல் பரிசு பெற்றவைகள்.

மாணிக்காவாசகர்:—வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் பி. ஏ. இயற்றிய சிவமணம் கமழும் நாடகம். பக்திரஸம் நிறைந்தது. மிகவும் சிறந்தது. வெகு அழகாய் அச்சிடப்பட்டது. விலை மிகச் சொற்பம்.

வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய நூல் முகத்துடன் கூடியது 0—8—0.

மங்களம்:—குடும்ப சம்பவங்களை அழகாய் உருவப்படுத்தும் ரூபகம் விலை மிகச்சொற்பம் 0—4—0.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்

மதுரை.

விலை சரசம்! **நயம் தினுசு!**



கண் சாளேஸ்வரக்காரர்களும், பார்வை மட்டாயிருக்கிற சிறுவர்களுக்கும், கண படங்கல், கண்காந்தல் முதலானவைகளுக்கும் ஆபரேஷன் செய்த கண்களுக்கும் இனமாகப் பரிசோதனை செய்து ஸ்படிக மூக்குக் கண்ணாடிகள் தினுசு தினுசான ரோல்டு கோல்டு, நிக்கல் ப்ரேமகளுடன் விலை சரசமாகக் கொடுக்கப்படும்.

K. R. &, Sons

Scientific opticians Madura.

மீராபாய்:—பக்தியும் ஞானமும் கருணாரஸமும் நிறைந்த நாடகம் புரொபஸர் ஆர். ஸ்ரீனிவாசய்யர் எம். ஏ. இயற்றியது. படங்களுடன் கூடியது. ரூ 1—4—0.

மீனாக்ஷிசுந்தரம்:—கி. வேங்கடராமய்யர் இயற்றியது ஒரு ஹிந்து குடும்ப சம்பவங்களை வெகு சமத்காரமாய்க் காட்டும் இனிய நாடகம். ரூ 0—6—0.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,

மதுரை.

படங்களுடன் கூடிய கதைகள்.

சுகிர்லாபம்—அல்லது நட்பின் மேன்மை		0—2—0
சிவாஜிமஹாராஜ்	ஆர். எஸ். நாராயணசாமி	0—2—0
குமணராஜன் —	ஐயர் பி. எல்.	0—2—0

அரிய ஞானக் களஞ்சியங்கள்.

ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை — மகாலயபக்ஷமும் நவராத்திரியும்
லோககுருவின் அவதாரங்கள் — அன்னிபெஸண்டம்மை சரித்திரம்
ஹிந்து என்பவன் எவன் — ஷை செய்யுள்
காயத்திரி — எண்ணங்களின் ரகசியம்
காயத்திரி ராமாயணம் — திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.
லோககுருவாகிய பரமன் வருவானேன்

ஒவ்வொன்றும் இரண்டணா

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
தியானப்பியால் உள்ள பிரயோஜனங்கள்
சர்வசமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷனை
மரணபயம் வேண்டாம். சர்மார்க்கதீபம்

ஒவ்வொன்றும் மூன்றணா

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது
(2) ஸ்தூலப்பிரபஞ்ச தர்மங்கள்—ஆத்மதர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் திரவஸ்தை
(7) கர்மநாசம் (8) சின்னங்கள்.

தியானக்கிரம விஷயம்	0—4—0
ஹிந்து மததூஷணையின் பரிகாரம்	0—4—0
உதாஸீன ஸாது ஸ்தோத்திரம	0—6—0
பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் ஷை	
கல்விகற்பித்தல்—ஈசுவர கைங்கரியம்	0—8—0
மனிதன் வம்சாவளியின் உண்மை	0—8—0
பிரஹ்மஞான விசாரத்தால் நமக்குறும் பயன்யாது	0—9—0
எனது பிரதிஜ்ஞை—வி. ஜினராஜதாஸர்	0—12—0
யோக உபந்யாஸங்கள்—அன்னிபெஸண்டு	0—12—0

தபால் சார்ஜ் வேறு. பூர்ணசந்திரோதயம் ஆபீஸ் மதுரை.

நேயர்களே! ஓர் வேண்டுகோள்!

நமது பத்திரிகைக்குத் தாம் ஒருபகாரம் செய்யலாம். அதைச் செய்வீர்களென்று நம்பி இதை எழுதலானோம்.

பத்திரிகைக்கு ஏராளமான வரும்படி யுண்டாகும் படி செய்வதால் தங்களுக்கும் பெருமையுண்டு எங்களுக்கும் நன்மையுண்டு. இப்பத்திரிகையானது ஒருவருடைய சொந்த நன்மையும் கருதி நடத்தப்படுவதல்லவென்பது தங்களுக்குத் தெரியும் இதன் வரும்படியைக்கொண்டு சிறு புத்தகங்களை அச்சிட்டு அறிவைப் பரப்புவதே எங்கள் நோக்கம்.

விளம்பரங்கள் அநேகம் நம் பத்திரிகையில் பிரசுரிக்கப் பெறுகின்றன. அவைகளை அவசியம் வாசிப்பீர்கள். அவைகளிற் கண்ட சாமான்களையும் தருவிப்பீர்கள். ஒரு நல்ல சாமான் வேண்டுமானால் நான்கு இடத்தில் விசாரித்து வாங்குவது வழக்கம் தான். ஆகையால் சாமான்களுக்கு எழுதும்போதும் விலை சாபிதா அல்லது காட்லாக்கு வேண்டுமென்று எழுதும்போதும் தாங்கள் இப்பூர்ண சந்திரோதயத்தில் விளம்பரத்தைப் பார்த்ததினால் எழுதுவதாய்ச் சொல்வீர்களானால் தங்களுக்கு ஒரு செலவுமில்லை, நஷ்டமும் இல்லை; எங்களுக்கும், அதனால் தங்களுக்கும், லாபம் உண்டு. விளம்பரம் செய்வோருக்கும் சந்தோஷமுண்டு.

இது ஒரு சிரமமான காரியமல்லவே! அவசியம் தாங்களிதை மறக்காதிருக்கவேண்டும். நாளையே எங்கள் விளம்பரக்காரருக்கு எழுதுங்கள்.

மானேஜர்,

பூர்ணசந்திரோதயம்.

The best Blood purifier and Tonic of the Day.

"காமலேன்"

தேகபுஷ்டிக்கு மருந்து.

ஆச்சரியமான குணமுள்ளது.

இது இரத்த விர்த்திக்குக் கைகண்டது. இதைக் குழந்தைகள் முதல் யாவரும் பத்தியமில்லாமல் சாப்பிடலாம். இரத்தத்தைச் சுத்திசெய்வதில் இது முதல்தரமான ஔஷதம். இதனால் தீரும் வியாதிகள்:— ஆரம்பக் குஷ்டம் 18, மேகநீர் துர்நீர் வியாதிகள், தேமல் மேகப்பத்து, சிரங்கு, கிரந்தி, நமைச்சல், கிரந்திப்புண், அரையாப்பு, கண்டமாலை, மேகநீர்ப்புண், சூலை 18, முதலான கெட்ட இரத்தத் தாலுண்டான சர்வரோகங்களையுங் குணப்படுத்தி தேகத்தைப் பரிசுத்தமாக்கி நல்ல சௌந்தரியத்தை உண்டாக்கும். இன்னும் நாள்பட்ட வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, உஷ்ணம், அடிவயிற்றுப்புண், வாய்ப்புண், இந்திரியநஷ்டம், இருமல், கொடிய க்ஷயம், கபம், ஈளை, காசம், அதிசாரபேதி, முதலான உஷ்ணத் தாலுண்டான வியாதிகளை எல்லாங்குணப்படுத்தி தேகத்தை குளிரச்செய்யும். வெட்டை வாய்வு, இடுப்புவலி, கைகால் முடக்கு, வாதம், நரம்புத்தளர்ச்சி, பலயீனம் காங்கை, தேகமெலிவு, அஜீரணம், அன்னத்துவேஷம், பித்தம், வாந்தி மயக்கம், முதலான வாத பித்த சம்பந்தமான நோய்களையும், வயிற்றுப்பொருமல், அஜீரணவாய்வு, குன்மவயிற்றுவலி 8 விதம், நெடுநாள் தீராத உஷ்ணவயிற்றுவலி, பெண்களுக்கு சூதகவயிற்றுவலி. கெற்பரோகம், முதலான பற்பல ரோகங்களையும் குணப்படுத்தி ஜீரணசக்தியை விசேஷமாக விர்த்திசெய்து, தேகத்தில் ஏராளமான இரத்தம் ஊறும்படிசெய்து, மூலக்கொதிப்பையும் உந்திக்கமலத்தையும் குளிர்ச்சி செய்து, நல்ல தேகபுஷ்டியும் சரீரவன்மையும், அழகும், தாது பலமும், தேக ஆரோக்கியமும் உண்டாக்கும். இதைச்சாதாரணமாக வியாதியில்லாதவர்கள்கூட இரத்தவிர்த்திக்காகச் சாப்பிடலாம். பத்தியமில்லை.

[illegible] நாள் சாப்பிடக்கூடிய புட்டி 1-விலை ரூ. 5—0—0

தபால் செலவு பிரத்தியேகம்.

விலாசம்:— மானேஜர்.

"காயகல்பம் ஆபீஸ்"

27—கொண்டல அய்யர் தெரு,

மிண்ட் பில்டிங்ஸ், மதராஸ்.